# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர்: [illegible] 10—09—1993

இதழ்: 18 விலை ரூபா 5-00


11-09-1993 அன்று
வெள்ளி விழாக் காணும்
மறைத்தொண்டர்களுக்கு
காவலனின் நல்லாசிகள்

## சிறப்பு இதழ்

(4 – 5 பக்கம் பார்க்க)

வாசிக்கத் தவறாதீர்


| | பக்கம் |
|---|---|
| இலங்கையின் இனப்பிரச்சனை | |
| ★ வத்திக்கான் வானொலி | ... 6 |
| குருக்களுக்கிடையிலான ஐக்கியம் | |
| ★ திருத்தந்தையின் பேட்டி | ... 3 |
| பொதுநிலையினரின் பங்கு | |
| ★ தஞ்சை ஆயர் மேதகு சுந்தரம் | ... 4 |
| ஆலோசனைக் குழு அமைத்தல் | |
| ★ 2ஆம் வத்திக்கான் சங்கம் | ... 7 |
| ★ ஓர் ஆலோசனை | ... 3 |
| நற்செய்தி அறிவிப்பு | |
| ★ புதிய நோக்கில் | ... 3 |


கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண் ✻

10 -9- 1993

Chundikuli ... Library

61வது திருப்பயணம்:

# வரலாறு படைக்கும் பாப்பரசர்

**முன்னாள் சோவியத் யூனியனில் திருத்தந்தை மேற்கொள்ளும் முதல் திருப்பயணத்தின் முதல் கட்டமாக, றோமிலிருந்து 3 மணி 10 நிமிட விமானப் பயணத்துக்குப் பின், லிற்றுவேனிய குடியரசின் தலைநகரிலிலுள்ள விமான நிலையத்தில் 04 - 09 - 93 சனியன்று, உள்ளூர் நேரம் பி. ப 7 மணிக்கு அந்நாட்டு அரசுத் தலைவர், கர்தினால், பேராயர்கள் திருத்தந்தையை பெருந்திரளான மக்கள் மத்தியில் இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் வரவேற்றனர்.** (பார்க்க பக்கம் 8)

முன்னாள் சோவியத் யூனியனைச்சார்ந்த லித்துவேனியா, லாற்றுவியா, எஸ்தோனியா என்னும் இம் மூன்று பால்ரிக் நாடுகளுக்கும் திருத்தந்தை திருப்பயணம் மேற்கொள்வாரென்பது சில ஆண்டுகளுக்கு முன்பு கனவில்கூட நினைத்துப் பார்க்கமுடியாத ஒன்றாக இருந்தது. எனினும் முன்னாள் சோவியத் யூனியனின் அதிபராகிய மிக்கேல் கோபெச்சோவின் 'பெரஸ்ரோயிக்கா' என்ற திறந்த கொள்கை இவ் வியப்புகளுக்கு வித்திட்டுள்ளது. அதோடு தற்போதைய அரசுத் தலைவர் போரிஸ் யெஸ்ரின் அக் குடியரசோடு ஒட்டிக்கொண்டிருந்த சில பிணைப்புகளைக் கடந்த செவ்வாயன்று முற்றிலும் நீக்கிவிட்டார்.

திருத்தந்தையின் திருப்பயணம் இடம்பெறவிருக்கும் ஓரிரு நாட்களுக்கு முன்பாக பால்ரிக் பகுதியிலிருந்து ரஷ்ய உப இராணுவப் படைகளை அகற்றியுள்ளார். கடந்த

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

## யப்பான் பேரரசர் பாப்பரசரைச் சந்தித்தார்

இவ்வுலகில் திருத்தந்தை 2ஆம் அருள்சின்னப்பர் கொண்டிருக்கும் ஒழுக்க நெறி அதிகாரத்திற்குதன் வணக்கத்தையும், யப்பான் தலத்திருச்சபை தன் நாட்டிற்கு ஆற்றி வரும் பணிக்கு நன்றியையும்தெரிவித்தார் யப்பான் பேரரசர் அக்கிகிற்றோ.

3–9–93 வெள்ளியன்று பாப்பிறையை திருத்தந்தையின் கோடை விடுமுறை இல்லத்தில் தன் மனைவியுடன் சந்தித்து உரையாடிய யப்பான் பேரரசர் அக்கி கிற்றோ, யப்பானில் கத்தோலிக்க திருச்சபை கலாசார, சமூக மற்றும் மனித அபிமான முறையில் ஆற்றி வரும் பணிகளுக்காக திருத்தந்தையிடம் தன் நன்றியை வெளியிட்டார்.

திருத்தந்தையை அமைதியின் தூதுவர் என்று பாராட்டிய பேரரசர் அவருக்கு வெண்கலப்புறா ஒன்றைப் பரிசளித்தார்.

அதன்பின் றோம் நகரில் செய்தியாளருக்குப் பேட்டியளித்த பேரரசர், ஹிறோஷிமாவில் திருத்தந்தை உலக அமைதிக்கு விடுத்த அழைப்பைக் குறித்து தான் இன்னும் மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்தார்.

## மடுத் திருப்பதியில் யாழ் ஆயர்

இவ்வருடம் ஆகஸ்ட் 15 மடுத்திருவிழாவைச் சிறப்பிக்க முன்னாள் மன்னார் ஆயரும் தற்போதைய யாழ் ஆயருமாகிய பேரருட் திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் சமுகமளித்தார். திருநாளுக்கு முன் தினமாகிய 14 ஆம் திகதி மாலை வழிபாட்டைத் தொடர்ந்து நற்கருணைப்பவனியும், திருநாள் திருப்பலியும் யாழ் ஆயர் தலைமையில், மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசவ் ஆண்டகை அவர்களுடன், முப்பது ஆயிரம் இடம் பெயர்ந்த அகதிகளுக்குப் புகலிடம் அளித்துவரும் மடுத்திருப்பதியில் பல்லாயிரம் மக்கள் மத்தியில் நடைபெற்றன. விழாத் திருப்பலியின் முடிவில் மடு அன்னையின் திருச் சுரூபப் பவனியும், ஆசீரும் இடம் பெற்றன.

ஏராளமான திருத்தல யாத்திரிகர்களின் நலன்களையும், திருவிழா ஏற்பாடுகளையும் மடுத்திருப்பதி பரிபாலகர் அருள் திரு. பிலிப் யேசுறாஜா அடிகளார் திறம்படச் செய்திருந்தார்.

## O. L. R. பங்கு மக்களுக்கு ஒரு புதிய அனுபவம்

செப்ரெம்பர் 8 ஆம் திகதி புனித அடைக்கல அன்னை ஆலயப் பெருவிழாவிற்கு பங்கு மக்களைத் தகுந்த வண்ணம் ஆயத்தம் செய்யும் முகமாக, "வார்த்தையில் வாழ்வோம்" எனும் மையக்கருத்தைக் கொண்ட குழு வழிபாடுகள் நடைபெற்றன. பங்குமக்கள் அனைவரும் பங்குபற்றக் கூடிய முறையில் 12 மையங்களில் மூன்று நாட்களாக, தினம் ஒரு கருப்பொருளுடன் – இறை வார்த்தைக்குச் செவிமடுப்போம்; மனந்திரும்புவோம்; புது வாழ்வு வாழ்வோம் - மாலை வேளையில் இவ்வழிபாடு மிகவும் பயனுள்ள வகையில் இடம் பெற்றது. குருக்கள், கன்னியர், குருமாணவர், மறை ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் பங்குத் தந்தை J. நிக்கலஸ் அடிகளார் ஒரு புதிய இறை அனுபவத்தை மக்களுக்கு அளித்தார்.

## யாழ் - மன்னார் ஆயர்கள் சிறீலங்கா பிரதமருடன் உரையாடல்

கொழும்பில் நடைபெற்ற இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவைக் கூட்டத்திற்கு சென்றிருந்த பொழுது, யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும் மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசவ் ஆண்டகையும் சிறீ லங்கா பிரதமர் கௌரவ ரணில் விக்கிரமசிங்கி அவர்களுடன் கோட்டே பாராளுமன்றக் கட்டிடத்தில் கடந்த மாதம் 5ஆம் திகதி வடபகுதி மக்களைப் பெரிதும் பாதிக்கும் ஐந்து முக்கிய விடயங்களைப் பற்றி கலந்துரையாடினர்.

பொருளாதாரத் தடை நீக்கல், போதுமான மருந்தும் எரிபொருளும் அனுப்புதல், மண்கிண்டிமலைச் சம்வத்தின் எதிரொலியால் நிகழ்ந்த கிளாலிக் கடல் கொலைகளும் வான் குண்டு வீச்சும், யுத்தக் கைதிகளின் விடுதலை, பேச்சுவார்த்தைகளின் மூலம் அரசியல் தீர்வைத் துரிதமாக்கல் ஆகியன பற்றி தங்கள் உள்ளார்ந்த கருத்துக்களை ஆயர்கள் எடுத்துக் கூறினர். மிகவும் சிநேக பூர்வமாக நடைபெற்ற இச் சந்திப்பின் போது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மாதாந்தம் உணவுப் பொருட்கள் அனுப்புவதற்காக தங்கள் நன்றியையும் ஆயர்கள்தெரிவித்தனர்.

## தலைவில்லு திருத்தலத்தில் 150வது வருட உற்சவம்

இந்துமா சமுத்திரத்தின் கரையிலே அமைந்ததுதான் தலைவில்லு என்னும் சிறு கிராமம். இங்குதான் இலங்கையின் பெயர்பெற்று விளங்கும் புனித சந்தானாள் நாயகியின் யாத்திரைத் தலம் அமைந்துள்ளது. இவ்வருடம் ஆவணித் திங்கள் 07 ஆம் நாள் [illegible] கும் அதிகமான மக்கள் திரள் இங்கு குழுமி வந்திருந்தது. இதற்குக் காரணம் இத்திருத் தலத்தின் 150 ஆம் வருட உற்சவம்தான்.

நெய்தல் நிலத்தின் வளம் கொழிக்கும் இத்திருத்தலத்தின் பரந்து விரிந்து கிடக்கும் முன்றலில் அமைக்கப்பட்ட இவ்வாலயம் ஆரம்ப காலத்தில், அப்போது பரந்திருந்த யாழ் மறை மாவட்ட நிர்வாகத்தின் கீழ் வளர்ச்சி கண்டது. சிலாபம் தனி மறைமாவட்டமாக பிரிக்கப்பட்ட போது இத்திருத்தலமும் அதன் ஆட்சிக்குள் கொண்டு வரப்பட்டது. அதன் முதல் ஆயராகிய அதி வணக்கத்திற்குரிய எட்மன் பீரிஸ் ஆண்டகையின் முயற்சியால் துரித வளர்ச்சி கண்டது. பாலைக் குடாவிலிருந்து கால்நடையாக செல்ல வேண்டிய நிலைமை மாறி ஆலயம் வரை பாதை அமைக்கப்பட்டது.

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## உலக மதங்களின் பாராளுமன்றக் கூட்டம்

உலக மதங்களின் பிரதிநிதிகள் அனைத்து மதங்களுக்குமான ஒழுக்க நெறிக் கோட்பாட்டுத் தொகுப்பை இவ்வாரத்தில் வெளியிட இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதத்தின் பெயரால் நடத்தப்படும் கொடுமைகள், சுற்றுச் சூழல் சீர்கேடு, ஆயுதக்குவிப்பு, பாலினப் பாகுபாடு போன்றவற்றைக் கண்டிக்கும் தொகுப்பில் தலாலாமா உட்பட 20 தலைவர்கள் ஏற்கனவே கையெழுத்திட்டுள்ளனர்.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் சிக்காகோவில் இடம் பெற்று வரும் இக் கூட்டத்தில் கிறிஸ்தவம், இஸ்லாம், இந்து, பரதம், புத்தம், சீக்கியம், சீராங்கியம் உட்பட 1000 ற்கு மேற்பட்ட 6ஆயிரம் பிரதிநிதிகள்கலந்து கொள்கின்றனர்.

இந் நவீன உலகு இன்றும் சகிப்பற்றதன்மை, வன்முறை மற்றும் அநீதியால் துன்பங்களை அனுபவித்து வருவதாக உலக மதங்களின் பாராளுமன்றக் கூட்டத்தில் உரையாற்றினார் அமெரிக்கக் கருதினால் யோசெவ் பெர்னாடில்.

அமைதியிலும் இரக்க வாழ்விலும் உலகில் ஒவ்வொரு மக்களும் ஒன்றிணைந்து வர வேண்டும் என்பதற்காக நமக்கு முன் சென்றவர்களின் உள்ளுணர்வுடன் நம்மை நாமே அர்ப்பணிப்போம் என அமெரிக்க ஐக்கிய நாட்டின் சிக்காகோவில் இடம் பெறும் உலக மதங்களின் கூட்டத்தில் உரையாற்றினார் கருதினால் பெர்னாடில்.

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

## ஐ. நா. பிரதிநிதியுடன் சந்திப்பு

ஐ. நா. அகதிகளுக்கான பிரதிநிதி உயர்திரு பீற்றர் நிக்கலஸ் அவர்களை, யாழ் ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும், யாழ் மறைமாவட்ட பிரதம குரு (V. G) அருள்திரு S. J. இம்மானுவேல் அடிகளாரும் அண்மையில் கொழும்பில் சந்தித்து மக்களின் போக்குவரத்திற்கு பூநகரிப் பாதையைத் திறந்து விடும் முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

## அகில இலங்கை வேதாகம வினாவிடைப் போட்டி 1993

### யாழ். மறைவட்ட முடிவுகள் (1ஆம் இடம்)

12 வயதின் கீழ் — புனித அந்தோனியார் பங்கு, சுண்ணாகம்

16 வயதின் கீழ் — ,, ,, ,, மானிப்பாய்

20 வயதின் கீழ் — ,, ,, ,, பாஷையூர்

● இவர்களது பரிசுக்குரிய வெற்றிக் கேடயங்களை 04-09-1993 அன்று மறைக்கல்வி இயக்குநரிடமிருந்து பெற்றுக் கொண்டார்கள்.

# எம்கருத்து

## கூட்டுப் பணித்தளம்

தலத் திருச்சபையின் ஒரு பங்கு வளர்கின்றது என்பதை அங்கு இயங்கும் பக்திச் சபைகள், கல்விக்கூடங்கள், சமூகத்திட்டங்கள் போன்றவற்றை அளவுகோலாகக் கொண்டு கணிக்கமுடியாது. மாறாக மக்களது கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சி, மறையறிவின் வளர்ச்சி, அன்பு, நீதி, சமத்துவம் போன்ற நற்செய்தி விழுமியங்களின் அடிப்படையில் அமைந்த உளப்பாங்கு — இவைகள்தான் ஒரு பங்கின் உண்மையான வளர்ச்சியின் அளவுகோல், இத்தகைய உயிருள்ள விசுவாச வளர்ச்சிக்கான வழிவகைகளை முதன் முதல் தேடுவது அவசியம்.

பங்குத் திருச்சபை என்றும் உயிர்த்துடிப்புடன் இருக்கவேண்டுமானால் அதன் உறுப்பினர்கள் அனைவரும் திருச்சபையின் அலுவலில் கூட்டாக ஈடுபாடு கொண்டு, எல்லாத் துறைகளிலும் முன்னேறப் பாடுபடவேண்டும், பொறுப்பை ஏற்கும் மனிதனுக்கு ஆர்வம் தானாகவே வரும். ஆகவே பங்குக் குருக்கள் தனித்து இயங்குவதை விட்டுவிட்டு பொறுப்புக்களை மக்களோடு பகிர்ந்து கொள்ள முன்வர வேண்டும்.

பங்கு மக்களில் திறமைகள் ஏராளமாக மறைந்து கிடக்கின்றன. ஒவ்வொருவருக்கும் கடவுள் கொடுத்துள்ள திறமைகளைப் பயன்படுத்தாமல் இருப்பது 'பயனற்ற ஊழியன்' என படைத்தவனின் கண்டனத் தீர்ப்புக்கு இட்டுச்செல்லும். மனிதன் தன்னை வளர்ச்சி பெறாத நிலையில் கடவுள் முன் நிறுத்துவது பொறுப்பற்ற செயல். திறமைகளை தனக்குமட்டுமென்று வைத்திராமல், மற்றவர்களுக்கும் பகிர்ந்தளித்து, மற்றவர்களுடைய திறமைகளினால் மக்கள் பயன் அடைந்து மகிழ்ச்சி காண ஒரு பங்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

எத்தனையோ பங்குக் குருக்கள் தங்களுக்கே உரித்தான பணிகளில் ஈடுபட முடியாமல் இருப்பதற்குக் காரணம் பங்கு மக்கள் செய்யவேண்டிய கடமை — பொறுப்புக்களைத் தாங்களே செய்து வருவதால்தான் என்று கூறினால் அது மிகையாகாது.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பரிந்துரையின்படி, குருகுலத்தாரும் பொதுநிலையினரும் தொடர்பு கொண்டு பேசவும், பேசுவதைத் திறந்த மனப்பான்மையுடன் கேட்கவும் வேண்டும். பங்கின் பிரச்சனைகளை பங்கு மக்களோடு கலந்து ஆலோசித்து தீர்மானம் எடுப்பது சிறந்தது. கூட்டுத் தீர்மானத்திற்கு அமோக வரவேற்பு இருக்கும். மக்கள் தீர்மானங்களை செயல்படுத்துவதற்கு பக்க பலமாக இருப்பார்கள்.

பெரும்பாலான பங்கு மக்கள் ஆலோசனைக் குழு தம் பங்குகளுக்குத் தேவை என்ற உணர்வு பெற்றவுடன் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பிக்க வேண்டும். அவசரப்படாமல் நிதானமாகத் திட்டமிட்டு குழுவை உருப்படுத்தினால் அது நீண்ட காலம் திறம்படச் செயல்படும்.

ஆலோசனைக் குழுவில் எல்லாவகையான மக்களின் பிரதிநிதிகளும் இடம்பெறவேண்டும். சில இடங்களில் பங்குக் குரு தனக்குவேண்டியவர்களை மட்டும் இக்குழுவில் சேர்த்துக் கொண்டு செயல்பட்டால் அஃது அவர் தனித்து செயல்படுவதற்குச் சமமாகும். வேறு இடங்களில் பங்குக் குரு பொம்மையாக்கப்பட்டு குழு உறுப்பினர் அதிகாரம் பெற்றுச் செயல்படுகிறார்கள். இதுவும் நாளடைவில் பல சிக்கல்களை உருவாக்கும்.

குழு கருத்துப் பரிமாறலில், சிலரது ஆலோசனைகள் ஏற்கப்படவில்லையே என்று எந்த உறுப்பினரும் வருத்தப்படுவது சரியல்ல: மேலும் எல்லாக் காரியத்திற்கும் மக்களுடைய ஆலோசனையைக் கேட்டுத்தான் பங்குக்குரு செயல்பட வேண்டும் என்று கருதுவதும் முறையல்ல.

குழுவின் உறுப்பினர்கள் பங்குமக்களைக் கிறிஸ்துவோடும் திருச்சபையோடும் இணைப்பதற்கு பங்குக் குருவிற்குத் துணையாக இருப்பார்கள். உறுப்பினர் பங்குக் குருவை ஓயாமல் குறைகூறிக்கொண்டிராமல், அவருடைய பலவீனத்தையெல்லாம் பொறுத்துக் கொண்டு ஆக்கவேலையில் குருவோடு சேர்ந்து செயல் புரிய வேண்டும். பங்குக்குருவுக்கு ஊக்கம்கொடுத்தால் அவர்தம் தொண்டினை மிகச் சிறப்பாகச் செய்வார்.

தொல்லைகள் எங்கும் வரத்தான் செய்யும். தொல்லைகளை மேற்கொள்வதற்கு பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். திறந்த மனப்பான்மை கொண்டிருக்க வேண்டும், எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனின் உதவியை நாடவேண்டும்.

## திருமறை அறிவை வளர்ப்போம்

# கிறிஸ்தவ கோட்பாடு

(சென்ற இதழ் தொடர்ச்சி)

7. திருச்சபையின் உறுப்பினர்களுள் குறிப்பாக ஒருவர், திருச்சபையின் பிறப்பிலும் இறைவனது திட்டத்தைச் செயற்படுத்துவதிலும் விசேட பங்கெடுத்துக்கொண்டமையால் தனிச்சிறப்புப் பெறுகின்றார். இவரே கிறிஸ்துவின் தாயாகிய மரியாள். ஆதியிலே உலகில் தாம் ஒரு பெண்ணிடம் பிறக்கவேண்டுமென்று இறைவன் சித்தங்கொண்டபோது பினார், சென்மபாவ தோஷத்தினால் மாசுபடாது அவளைக் காத்தார். தூய்மையும் பரிசுத்தமும் உடையவளாக அவளைப் பாதுகாத்தார். அவளது திருமகனாகிய இயேசு கிறிஸ்து ''பாவம் தவிர மற்றெல்லா வற்றிலும் மனுமக்களைப் போலானார்'' (எபி. 4, 15; உரோ. 8, 3) எனப் புனித சின்னப்பர் எழுதியுள்ளார். காலம் வந்தபோது, இப்பெரும் பேறுக்குரியவளாக மரியாளைத் தேர்ந்துகொண்டார். வாழ்வின் சாதாரண நியதிகளிலிருந்து அவர் அவளுக்கு விதிவிலக்கு அளிக்கவில்லை. ஆனால், அவளது உற்பவத்திலிருந்தே அவளைத் தம் அருட்கொடைகளால் நிரப் அவளை மீட்பரின் மானிடத் தாயாக ஆக்கப்போகின்ற அந்த அற்புதமான நிகழ்வில் பரிசுத்த ஆவி செயற்படும் பொருட்டு, கடவுள் மரியாளின் சம்மதத்தைக் கேட்டார். தொடக்கத்திலிருந்தே கிறிஸ்தவர்கள் மரியாளை ''தேவ தாய்'' என்னும் மகிமைப் பெயரால் அழைத்தனர். கடவுள் இறைத்தன்மையில் இருக்கும்போது மரியாள் அவருக்குத் தாய் என்பது இதன் பொருளன்று. மனுவுரு எடுத்த இறைவனாகிய கிறிஸ்துவுக்கு அவள் தாய் என்பதே இதன் பொருளாகும். மீட்பு என்னும் மறைபொருளில் அவள் கடவுளின் அடியாளாக செயலூக்கத்துடன் ஒத்துழைத்தாள். கிறிஸ்துவின் பிறப்பிலிருந்து, அவரது குழந்தைப் பருவம், பகிரங்க வாழ்வு ஆகியவற்றிலும் அவரது சிலுவை மரணம் வரை ஒத்துழைத்தாள். கிறிஸ்துவின் இவ்வுலக வாழ்விலே நெருக்கமாக இணைந்திருந்தது போலவே, இவ்வுலக வாழ்வின் பின்னரும் அவரோடு இணைந்திருக்கின்றாள். ஆகவே, இறைவனது படைப்புக்களில் முதன்மையானவளும், மாந்தரனைவருக்கும் ஓர் முன்மாதிரியாகவும் மேல்வரிச் சட்டமாகவும் விளங்குபவளுமான மரியாளது திருவுடல் மரணத்தின் பின் அழிவுறவில்லை. உயிர்ப்பின் பின்னர் கிறிஸ்துவின் திருவுடல் மகிமைபெற்றது போல் அவளது திருவுடலும் மகிமை பெற்றது. இயேசுவுடன் அவள் கொண்டுள்ள ஐக்கியத்தின் காரணமாகவும், பரிசுத்த ஆவிக்கு அவள் அளிக்கும் முழுமையான ஏற்பமைவு காரணமாகவும், இறைத் தந்தையிடம் அவள் கொண்டுள்ள பூரண பற்றுக் காரணமாகவும், கிறிஸ்தவர்களுக்கு அதிசிறந்த முன்மாதிரியாகவும், முழுத் திருச்சபையினதும் ஆன்மீக அன்னையாகவும் விளங்குகிறாள்.

(வளரும்)

## அன்னை திரேசாவின் இதயக் குரல்

### ● அன்புக் குழந்தைகளே!

### ★ அனாதைக் குழந்தைகளுக்கு உதவி செய்வோம்:

குழந்தைப் பருவம்தான் மனித வாழ்க்கையின் பரிசுத்தமான பருவம்; அவர்களிடம் ஆபாசம் கிடையாது. ஆகவே குழந்தைகள் தான் தெய்வம்; தெய்வம் தான் குழந்தை. இங்கு உள்ள குழந்தைகளுக்கு தாய், தந்தை, அண்ணன், தம்பி எல்லோரும் இருக்கிறார்கள். ஆனால், இந்த ஊரிலும், நாட்டிலும், உலகத்திலும் அன்னையையும் தந்தையையும் இழந்து, ஆதரிப்பாரற்றுத் திரியும் அனாதைக் குழந்தைகள் ஏராளமானோர் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தொண்டு செய்வதையே கடவுளுக்குச் செய்யும் தொண்டாக நான் கருதுகிறேன்.

அனாதைக் குழந்தைகளைப் படைத்த இறைவன் ஆதரிக்கும்குழந்தைகளையும் படைத்திருப்பதைக்கண்டு பூரித்துப்போனேன். (இதற்கு ஆதாரமாக, அடுத்த இதழில்: அன்னை திரேசா கூறிய இரு சம்பவங்கள்.)

## புனித அவிலா திரேசம்மாள் திருநாள் ஒக்ரோபர் 15

''என் ஏழு வயதிலேயே எனக்கும் என் தம்பிக்கும் வேத சாட்சிகளாக இறந்து இறைவனோடு ஒன்றிக்க வேண்டும் என்பது அடக்க முடியாத ஆசை. புனிதர்களின் சரிதைகளைப் படிப்பதிலே அளவற்ற இன்பம். நாங்கள் இருவரும் அடிக்கடி, நாம் எப்படி வேதசாட்சிகளாகலாம் என்று தனிமையில் உரையாடுவோம். ஒரு நாள் வேதசாட்சிகளாக மாற எண்ணி, யாருக்கும் தெரியாமல் வீட்டை விட்டு வேறு நாடு செல்ல கிளம்பி விட்டோம்......''

இப்படி ஆழ்ந்த இறையன்புடனும், குழந்தை உள்ளத்துடனும் கூறுபவர் தான் அகிலமே போற்றும் புனித அவிலா திரேசம்மாள். ஸ்பெயின் நாட்டில் உள்ள அவிலா நகரில், அல்போன்சுஸ் சான்சுஸ், பெயாட்ரிக் அகுமாதா என்னும் பண்புள்ள பெற்றோரின் மகள் தான் நம் புனிதை.

தன் 20 - வது வயதில் கார்மேல் சபையின் கன்னியரானவள், புனிதப் பாதையில் தன் வாழ்க்கைப் பயணத்தை ஆரம்பித்தாள். தன் சொந்த சபையில் சீர்திருத்தம் செய்ய முற்பட்டு, பல எதிர்ப்புகளுக்கிடையே, துன்பங்களைப் பொறுமையுடன் தாங்கிக் கொண்டு ஆழ்ந்த செபத்திலும், கடின ஒறுத்தல் முயற்சிகளிலும், தவத்திலும் சிறந்த சபையாக மாற்றினாள்.

மிக ஆழ்ந்த போதனைகளையும், இறைவனின் அன்பினையும் மகிமையையும் எடுத்துக் கூறும் வகையில் பல பயனுள்ள நூல்களையும் எழுதிய புனிதை, திருச்சபையில் திருமறை வள்ளுனராகப் இன்று போற்றப்படுகிறார்.

''இறைவன் மீது நமக்குள்ள அன்பு வெறும் பக்தி முயற்சிகளிலும், வெளிப்படை ஒழுங்கு முறைகளிலும் அடங்கவில்லை. மாறாக எல்லா, காரியங்களிலும் இறைவன் திருவுளம் கண்டு அவரை மகிழ்ச்சிப் படுத்துவதிலும், அவரை மனம் நோகச் செய்யும் எல்லா, காரியங்களையும் தவிர்ப்பதிலுமே அடங்கியுள்ளது'' என்று சுட்டிக்காட்டினாள்.

''இறைவனைப் பற்றிய உண்மைகளை அறிந்து கொள்வதை விட சிறப்பான செயல் எதுவும் இல்லை. மேலும் பரலோக தந்தையின் அன்பு மகனின் மகிமையையும், புகழையும் பரப்புவதும் கத்தோலிக்க திருச்சபையின் வளர்ச்சிக்காக செபிப்பதும் நமக்கு இறைவன் மீதுள்ள அன்பை வெளிப்படுத்தும் செயல்கள்'' என்று கூறியவள் அதைத் தன் வாழ்விலே வாழ்ந்து காட்டினாள். இப்பெரும் புனிதை 1582 ஆம் ஆண்டு அக்டோபர் 4 ஆம் நாள் இறைவனிடம் ஒன்றிக்க விண்ணகம் சென்றாள்.

இப்பெரும் புனிதை நமக்கு காட்டும் வழி செபம் நிறைந்த வழி! செபத்தின் மகிமையை உணர்வோம் — அனைத்து இன்னல்கள், துன்பதுயரங்கள், சுவைநிறைந்த வாழ்வு - எல்லாவற்றையும் ஆண்டவனின் பாதத்திலே செபத்தின் மூலம் சமர்ப்பிப்போம். ஆண்டவனை அண்டியவர்க்கு இறைவன் என்றும் நன்மை செய்வார்!

## உலக மதங்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இக் கூட்டம், உலக மதங்களின் முதல் பாராளுமன்றக் கூட்டம் 1893 ல் இடம் பெற்றதின் 100 வது ஆண்டைச் சிறப்பிப்பதாக உள்ளது. சனியன்று (4—11—93) முடிவடைந்த இக் கூட்டத்தில் புத்தமதத் தலைவர் தலாலாமாவின் உரையும் இடம் பெற்றது.

இளைஞர் — யுவதிகளுக்கு ஓர் அழைப்பு

# துறவற வாழ்வு

● அருட்சகோதரி சாந்தி

(சென்ற இதழ் தொடர்ச்சி)

**குழுவாழ்வு:**

திருச்சபைக்குள்ளே விழுங்கும் குழுக்கள் என்ற முறையில் படைப்பு அனைத்தும் ஒன்றாக இணைகின்ற இறுதிக்கால குழுவின், காணக்கூடிய குழுவை முன்கூட்டியே காணப்படும் அறிகுறியாக துறவறக் குழுவாழ்வு அமைந்துள்ளது. துறவற வாழ்வானது இறை அரசு இவ்வுலகினுள் புகுந்து விட்டது அல்லது வந்து விட்டது என்பதன் அறிகுறியாக இருக்கின்றது. துறவற வாழ்வு இதனை வாழ்ந்து காட்டுகிறது.

துறவறக் குழுக்களில் வளங்கள் பகிரப்படுகின்றன. இவ்வாறு பகிரப்படும் போது பொதுவான நோக்கம், ஆதாரம் உறுதி செய்யப்படுகின்றது. இந்தக் குழுவாழ்வு துறவு வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்றாக இருக்கின்றது.

**உருவாக்கம்:**

துறவற உருவாக்கத்தின் நோக்கம் என்னவெனில்; கிறீஸ்தவசீடத்துவ அழைப்பை உணர்ந்த ஒருவர் தான் யார் என்று இனம் கண்டு கொள்ளவும் தன் அழைப்பின் மதிப்பீடுகளை தனக்காக்கி அதைத் தனித்தன்மையுடன் வாழ்வதற்கு கொடுக்கப்படும் பயிற்சி நெறியாக இந்த உருவாக்கம் அமைகின்றது. இவ்வுருவாக்கம் வெவ்வேறு படிநிலைகளில் திருச்சபையின் கோட்பாடுகளுக்கும் துறவற நிறுவனங்களின் புதிய திருப்பங்களுக்கும் அமைய, மானிட உளவியல் ஆன்மீக உருவாக்கம் கொடுக்கப்படுகின்றது. இவ்வுருவாக்கம் கிறீஸ்துவின் சாயலில் முழுமை பெறுவதை நோக்கிக் கொடுக்கப்படுகின்றது.

**பணிவாழ்வு:**

அனைத்து மக்களுக்கும் நற்செய்தியை எடுத்துச் செல்லுதல் மூலம் முழு மனித குலத்தையும் உருமாற்றம் செய்வதும் புதுப்பித்தலும் தான் துறவிகளாகிய எமது பணி. தாம் உரைக்கும் வார்த்தைகளோடு ஒத்திருக்கின்ற துறவு வாழ்வு இறைவாக்கை நேர்மையாக எடுத்துரைக்கின்றது. எம்மோடு வாழும், நாம் பணி செய்யும் இடத்து மக்களின் துன்ப துயரங்களில் நாமும் துன்பப்படுகின்றோம். எம்முடைய வாழ்வு எமது மக்களின் வாழ்வுக்குள் பின்னிப் பிணைந்த ஒரு வாழ்வாக அமைகின்றது. இப்பணி வாழ்வில் இறைவாக்குரைக்கும் அடையாளம் யாதெனில் ஏழைகளுக்கு நற்செய்தி போதிக்கப்படல் ஆகும். சிறப்பாக ஏழைகளும் ஒதுக்கப்பட்டோரும் நம்மோடு ஒன்றிணைக்கப்படும் போது இறை அரசு பிரசன்னமாகிச் செயலாற்றுகின்றது என்பதை அறிகின்றோம். தனது உலகினுள் அனைவரையும் இணைத்துக் கொண்ட இயேசுவின் சீடர்கள் அவர் ஆற்றியதை விடக் குறைவாக எதையும் ஆற்ற முடியாது. ஏழைகளுக்கும் ஒதுக்கப்பட்டோருக்கும் நம்மை அர்ப்பணிப்பதானது இயேசுவுக்கு நாம் செய்த அர்ப்பணத்தின் வெளிப்பாடாக உள்ளது. ஒரே இறை வாக்குரைக்கும் அடையாளம் என்ற முறையில் இதன் மதிப்பீடு நற்செய்தித் தெரிவின் உள்ளார்ந்த மதிப்பீட்டில் இருந்து பிறக்கின்றது.

# மேய்ப்புப் பணிக்கான மாநாடு

## நற்செய்தி அறிவிப்பு — புதிய நோக்கில்……

★ சந்திரன்.

"உலகெங்கும் சென்று படைப்புக்கெல்லாம் நற்செய்தியினை அறிவியுங்கள்" என்பது உயிர்த்த இயேசு தம்முடைய சீடர்களுக்கு வழங்கிய பணிப்புரையாகும். 20 நூற்றாண்டுகள் கழிந்தாலும் இன்றும் தம்மை இயேசுவின் சீடர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் ஒவ்வொருவரையும் இப்பணிப்பு கட்டுப்படுத்தத்தான் செய்கிறது. இந்நிலையில் இயேசுவின் பணியைத் தொடரவே ஸ்தாபிக்கப்பட்டது எனப்படும் திருச்சபைக்கு இது இயல்பானதொன்று என்பது கண்கூடு. இதையே சங்க ஏடான மறை அறிவிப்புப்பணி தீர்வுத்தொகுப்பு எண் 2 கூறுகிறது.

இவ்வாறாக திருச்சபையின் அடிப்படைப்பணி நற்செய்தி அறிவிப்புப்பணியே என்பதற்கு இரண்டாம் கருத்துக்கு இடமில்லாவிட்டாலும் நற்செய்தி அறிவிப்பின் உள்ளடக்கம் பற்றிய புரிந்துணர்வின் அடிப்படையில் அதன் தன்மைகளும் வடிவங்களும் மாறி வருகின்றன.

**இயேசுவே செய்தி:**

இயேசு தந்தையால் அனுப்பப்பட்டு இவ்வுலகிற்கு வந்தார். அவர் கொண்டுவந்த செய்தி இறையரசு தன்னிலே உதயமாகிறது என்ற செய்தியாகும். இவ்வாறு உலகில் விடிந்த இறையரசு படைப்பிற்கெல்லாம் எடுத்துரைக்கும் பணியைத்தான் இயேசு திருச்சபையிடம் ஒப்படைத்தார். இயேசு எவ்வளவு தூரம் இறையரசுடன் பிணைக்கப்பட்டிருந்தார் என்று சொன்னால் உயிர்த்த இயேசுவையே திருச்சபை தனது நற்செய்தியாக ஆக்கிக்கொண்டது.

**திருச்சபை = இறையரசு?**

இவ்வாறு இயேசுகிறிஸ்துவைப் போதித்த சீடர்கள் ஒரு திருச்சபையாகச் சேர்ந்தனர். பின்பு படிப்படியாக திருச்சபை கிறிஸ்துவின் மறையுடலாகவும் அதனால் இறையரசிற்கு சமமானதாகவும் புரிந்து கொள்ளப் பட்டது. திருச்சபையில் உறுப்புரிமை பெறுபவர்கள் இறையரசிலேயே உறுப்புரிமை பெறுகிறார்கள் என்று எண்ணப்பட்டது. அதனால் திருச்சபையை போதிப்பதும் இல்லாத இடங்களில் தலத்திருச்சபையை உருவாக்குவதுமே மறையறிவிப்புப்பணி என எண்ணப்பட்டது. இந்நிலைப்பாட்டின் பின்னணியிலே திருச்சபைக்கு வெளியே இருப்பது இளௌகீகம் தீயது.

(திருச்சபை = இறையரசு எனக் கருதப்பட்டது) மற்றைய மதங்கள் அனைத்தும் தப்பானவை மீட்பளிக்க முடியாதவை போன்ற கருத்துக்கள் இருந்தன. அதனால் மற்றமதங்களைத் தாக்கியும், பல வேளைகளில் வன்முறைகளைப் பாவித்தும் கூட மக்கள் திருச்சபையில் சேர்க்கப்பட்டனர்.

**சங்கத்தின் பின்பும்:**

ஆனால் இக்கருத்திலுள்ள தவறுகளையும் பிற்போக்குத்தனத்தையும் சுட்டிக்காட்டி நற்செய்தி அறிவிப்புப் பணி பற்றிய புதுப்பிக்கப்பட்ட புரிந்துணர்வை உருவாக்குவதற்கான அடிப்படை வேர்களை 2ஆம் வத்திக்கான் சங்கம் இட்டது. சங்க ஏடான திருச்சபை பற்றிய மறைக்கொள்கைத்திரட்டு எண் 16 கிறிஸ்தவ ஒன்றிப்பையும் மற்றைய மதங்களில் உண்மையுண்டு என்பதையும் வலியுறுத்தியதோடு நற்செய்தி அறிவிப்பானது மதங்களுக்கு எதிரானதல்ல. ஆனால் திருச்சபை உட்பட எல்லா மதங்களையும் மக்களையும் மயக்கும் தீமைக்கு எதிரானது என்பதைத் தெளிவாக விளக்கியது. இதனால் சங்கத்திற்குப் பிந்திய காலங்களில் திருச்சபையை பரப்புவதுதான் நற்செய்தியறிவிப்பு என்ற குறுகிய கருத்து மறைந்து சமுகத்தின் பல்வேறு மெய்மைகளுடன் நற்செய்தி நடத்தும் உரையாடலே நற்செய்தியறிவிப்பு என்ற பரந்த கருத்து உருப்பெற்றது.

**ஆசியப் பார்வையில்**

நற்செய்தியறிவிப்பு பற்றிய இப்புதிய புரிந்துணர்வானது பல மதங்கள், பல பண்பாடுகள் பலதரப்பட்ட வாழ்க்கைச் சிக்கல்களைக் கொண்ட ஆசியப் பகுதிக்கு மிகவும் முக்கியமானதாக அமைகிறது. இதனால் தான் 1978இல் ஆசிய ஆயர் மன்றம் வெளியிட்ட ஆவணத்தில் மறைபரப்பானது (1) பண்பாடுகளோடு உரையாடல் (2) மறைகளோடு உரையாடல் (3) ஏழைகளோடு உரையாடல் என்றவாறாக உரையாடல் சூழமைவிலேதான் மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தப் படுகிறது.

**நாமே நற்செய்தியாக**

உண்மையில் நற்செய்தி அறிவிப்பு என்பது கிறிஸ்துவைப் பற்றி சந்தி சந்தியாக வாய்கிழிய கத்துவதல்ல. ஆனால் இயேசுவைப் போல நாமே நற்செய்தியாக மாறுவதில் தான் தங்கியுள்ளது. எவ்வாறு இறைமகன் கிறிஸ்து சகல மனிதத் தன்மைகளையும் ஏற்றுக் கொண்டு எமக்குச் செய்தியானாரோ அதேபோல நாமும் அதாவது திருச்சபையும் அதன் ஒவ்வொரு உறுப்பினர்களும் எமது சூழலின் தன்மைகளை ஏற்றுக்கொண்டு உண்மையான மறு கிறிஸ்துவாக மாறவேண்டும். எமது சூழல் துன்பமும், ஏழ்மையும் நிறைந்தது. ஆகவே ஆடம்பரமான முயற்சிகளல்ல ஆனால் அடக்கமான சிலுவை சுமப்புத்தான் இன்று எமது மண்ணுக்குப் பொருத்தமான நற்செய்தியறிவிப்பு.

பொன்முடிகளைக் களைந்துவிட்டு முண்முடிகளை அணிந்து கொள்ள எமது திருச்சபை தயாராகுமா?

## பங்கில் ஆலோசனைக்குழு அமைப்பதற்கு ஓர் ஆலோசனை

ஆலோசனைக் குழுவின் அவசியத்தை உணராமல், மேலிடத்திலிருந்து வந்த கட்டளையை நிறைவேற்ற முயற்சிப்பது பயனற்ற செயலாகும்.

மக்கள் தாமாகவே பங்குக் குழுவிற்கு ஆலோசனை வழங்க முன்வர வேண்டுமென்று எதிர்பார்ப்பதும் பகற்கனவாகும். "மயிலே மயிலே இறகுபோடு" என்று கூறினால் மயில் இறகு போடுமா? அது நிச்சயமாக இறகு போடாது. அதைப் போலவே மக்களைப் பார்த்து ஆலோசனை கொடுங்கள் என்று ஞாயிறுதோறும் வருந்தி வருந்திக் கேட்டாலும் ஆலோசனை வந்து சேராது.

முதலில் ஒரு சிலரைத் தேர்ந்து கொண்டு அவர்களுக்கு பங்கைப் பற்றியும், பங்கு மக்களைப் பற்றியும், பங்குக் குருவைப் பற்றியும், கிறிஸ்தவ வாழ்வைப் பற்றியும், நற்செய்தி அறிவிப்புப் பற்றியும் சில கருத்துக்களை வழங்கி சிந்திக்க வைக்க வேண்டும். சிந்தனையின் விளைவால் ஆலோசனைக் குழு தேவை என்ற உணர்வு உண்டாகும்.

இவ்வாறு உணர்வு பெற்றவர்கள் முதலில் செயல்பட வேண்டும். எவ்வாறு செயல்படுவது? பங்கின் மக்களின் குடும்ப பின்னணியையும், சமய சமூக நிலையையும் முதலில் அறிய வேண்டும். பின்னர் பங்கிலே இருக்கும் மக்களில் தலைமை ஏற்கும் பண்புகளைக் கொண்டிருப்பவர்களை அலசிப் பார்த்து கண்டு பிடிக்க வேண்டும். மக்களின் பல்வேறு திறமைகளை கணிக்க வேண்டும். மேலும் பங்கிலேஇருக்கும் வசதிகளையும் நன்கு தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

இவற்றையெல்லாம் அறிந்த பிறகு மக்களிடம் தங்களுடைய கண்டு பிடிப்புக்களை, தகவல்களைப் பற்றி சர்வ சாதாரணமாக நண்பர்களிடம் பேசுவதைப் போல் சிந்திக்கக் கூடியவர்களிடம் உரையாட வேண்டும். நாளடைவில் நல் மனம் உள்ளோர் ஒன்று கூடி தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்வர்.

பங்கிலுள்ள பலதரப்பட்டோர், பலநிலையினருடன் உரையாடுவதின் பயனாக ஆலோசனைக் குழு தம் பங்குத் தேவை என்ற உணர்வு பெற்றவுடன் அதற்கான ஏற்பாடுகளை செய்ய ஆரம்பிக்க வேண்டும். எதற்கும் நீண்ட கால ஆயத்தம் அவசியம்!

திருத்தந்தை அளித்த பொதுப் பேட்டி

## குருக்களுக்கிடையேயான ஐக்கியத்தின் அவசியம்

குருக்களிடையேயான ஐக்கியமானது கிறிஸ்துவின் குருத்துவத்திலான குருக்களின் திருவருட்சாதன மற்றும் ஆன்மீக செல்வத்தில் தன் மூலத்தைக் கொண்டுள்ளது; மற்றும் ஆயர்களுடனான தங்கள் ஐக்கியத்தில் தங்கள் பணிகளை ஏற்று நடத்தும் குருக்களின் மறைமாவட்ட குழு ஒன்றிப்பினால் வெளிப்படுத்தப்படுகின்றது.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் போதித்தது போல் குருக்கள் ஒவ்வொருவரும் மறைத்தூது, அன்பு, பணி, சகோதரத்துவம் ஆகிய சிறந்த பிணைப்புக்களால் மற்றக் குருக்களுடன் இணைக்கப்படுகின்றார்கள்.

குருக்கள் மறைமாவட்டக் குருக்களாயினும், துறவறக் குருக்களாயினும் கிறிஸ்தவ சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதற்கு உதவும் பல்வேறு மறைப் பணிகளிலும் அப்போஸ்தலிக்கப் பணிகளிலும் ஒருவருக்கொருவர் உதவிபுரியும் வண்ணம் வழங்கும் ஆர்வமுள்ள ஒத்துழைப்பில் கிறிஸ்தவ சகோதரத்துவம் பலப்படுத்தப் படுகின்றது என்கிறார் திருத்தந்தை.

தூய ஆவியின் கொடைகள் மற்றும் வெவ்வேறு தனி வரங்களை ஏற்றுப் போற்றுதலை அடிப்படையாக கொண்டுள்ள இச் சகோதர உணர்வு, உதவி தேவைப்படும் குருக்களுக்கு வழங்கப்படும் தாராள மனதுடன் கூடிய ஆதரவிலும், குருக்களின் குழுவிலும், வயது முதிர்ந்த மற்றும் இளம் குருக்களிடையே நிலவும் நம்பிக்கை மற்றும் மதிப்புடன் கூடிய உதவிகளிலும் வெளிப்படுத்தப்படுகின்றது. இத்தகைய உணர்வை முன்னேற்ற விரும்பும் 2 ஆம் வத்திக்கான் பொதுச் சங்கம், குருக்களிடையேயான குறிப்பிட்ட கால இடைவேளைகளுடன் கூடிய கூட்டங்களுக்கும், உயரிய உன்னத வாழ்வைப் பொதுவில் கடைப்பிடிப்பதற்கும் கிறிஸ்தவப் புனிதத்துவத்தை ஊக்குவிக்கும் திருச்சபை அங்கீகாரம் பெற்ற இயக்கங்கள் திருத்தப்படுவதற்கும் பரிந்துரைக்கின்றது. இவ்வழிகளில் திருச்சபையானது குருத்துவ ஐக்கியத்தை தன் மேய்ப்புப் பணியாளர்களின் வாழ்வில் ஒரு பலனுள்ள மூலப்பண்புக் கூறாய் மாற்ற ஆவல் கொள்கிறது. இவ்வாறு 1-9-93 தன் பொதுப் பேட்டியை வழங்கிய திருத்தந்தை தன் அப்போஸ்தலிக்க ஆசீரையும் வழங்கினார்.

# வெள்ளி விழா 25 ஆண்டுகள் சிறப்பிதழ்

# மறைக்களம் கண்ட இறைத் தொண்டர்கள்

வத்திக்கான் சங்க ஒளியிலே காலத்தின் தேவையை உணர்ந்து அன்று மகா வந்தனைக்குரிய எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை அவர்களால் தெரிந் தெடுக்கப்பட்டு உருவாக்கப்பட்டவர்களே இன்று யாழ். மறை மாவட்டத்தின் நிரந்தர மறை ஆசிரியர்களாகப் பணியாற்றும் அறுவரும். இவர்கள் வாழ்வில் எவ்வளவோ சோதனைகள் புயலாய் எழுந்து வீசியபோதும் தளராத மனத் துடனும், சேவையில் கொண்ட பற்றுதியுடனும், இறைசித்தத்தைப் பிரமா ணிக்கமாய் ஏற்று நிலைத்து நிற்பவர்கள். இந்த அறுவரைத் தவிர இவரால் தெரிந்தெடுக்கப்பட்டு உருவாக்கப்பட்ட இன்னும் சிலர் சந்தர்ப்பவசத்தால் வெவ்வேறு பணிகளுக்கு ஆஜராக்கப் பெற்றாலும் அதன் வழியாகத் தங்கள் அழைப்பின் நோக்கு நிறைவேற அயராது உழைப்பவர்கள்.

இன்று இவர்களது சேவை பல வழிகளிலும் யாழ் திருச்சபைக்கு வேண் டற்பாலாயுள்ளது. இன்று இது யாராலும் ஏற்றுக் கொள்ளப்படும் உண்மை. இவர்கள் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக பங்குகளிலிருந்து பள்ளிகள் தோறும், கிராமங்களிலிருந்து நகரங்கள் தோறும், குருமடம் முதல் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் தோறும், இன்னும் மறைக்கல்வி நிலையம், திருவழி பாட்டு நிலையம் ஆகிய அனைத்தும் பணி நிலையங்கள்தோறும் அரும்பணி யாற்றி வருகின்றனர். இந்த வகையில் கடந்த ஆண்டு திரு. M. யேசுதாசன், திரு. S. அந்தோனிப்பிள்ளை இருவரும் தங்கள் சேவைக்காலத்தின் 25ஆவது ஆண்டு நிறைவை உளப் பூரிப்போடு கொண்டாடி நின்றனர். இவ்வாண்டு திரு. S. F. சவுந்தரம், C. பங்கிராஸ் இருவரும் இறைபணியில் வெள்ளிவிழாக் காண்கின்றனர்.

## சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. S. F. சவுந்தரம்



திரு. S. F. சவுந்தரம் பாண்டியன் தாழ்வு, முருங்கன், பருத்தித்துறை, மானிப் பாய், இரணைதீவு, நானாட்டான், திருநெல் வேலி, கிளிநொச்சி, விளான், ஆகிய பங்கு களிலும் இப்பணிக்காலங்களில் இடையிடையே மறைக்கல்வி நிலையத்திலும் இன்றும் அரும்பணியாற்றி வருகின்றார்.

## மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. C. பங்கிராஸ்



திரு. C. பங்கிராஸ் அவர்கள் பாண்டியன் தாழ்வு, கிளிநொச்சி, முருங்கன், பருத்தித் துறை ஆகிய பகுதிகளிலும் தற்பொழுது மானிப்பாயிலும் அரும்பணியாற்றி வருகின் றார் இவர் வேதாகமத்தில் சிறப்புப் பயிற்சி பெற்றவர். இவர் பெற்ற இப்பயிற்சியின் பய னாக யாழ் மறைவட்டம் பயனடைந்துள்ளது என்றால் மிகையாகாது.

● ம. யேசுதாசன் (மறை ஆசிரியர்)

# மறைப்பணியில் பொதுநிலையினரின் பங்கு

★ தஞ்சை ஆயர் மேதகு இரா. ஆ. சுந்தரம்

இன்று தாய்த் திருச்சபை பலமுனைத் தாக்குதல்களைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. இந்த நேரத்தில் பொதுநிலை யினர் விசுவாசத்தைக் காப்ப தில் துணிச்சல் காட்ட வேண் டும். கர்தினால் நியூமன் கூறு வது போன்று "திரு ஆட்சி யாளர் மட்டுமே திருச்சபை அல்ல. ஆனால், இறை மக்கள் அனைவரும் இணைந்த ஒருட லே திருச்சபை."

அப்போஸ்தலிக்க திருப் பீடம் (Holy See) தொன்று தொட்டே விசுவாசிகளின் குரலை மதித்து வந்துள்ளது. மக்கள் குரலே கடவுள் குரல் (Vox Populi Vox Dei) திரு மறையின் உயிரான கொள்கை களுக்காகப் போராடுவதில் பொது நிலையினர் தங்கள் மேய்ப்பர்களோடு தோளோடு தோள் நிற்கவேண்டும்.

பொது நிலையினர் உலகக் கவலைகளுக்கிடையே வாழும் போது உலகிலே நற்செய்தியி னைப் பரவச் செய்திடச் சிறந்த பணியாற்ற முடியும். திருப் பணியாளர் இல்லாத இடங்களிலும், திருமறையைத் துன்புறுத்தும் ஆட்சிமுறைக ளால் அவர்கள் தடைசெய்யப் பட்ட நேரத்திலும், பொது நிலையினர் தங்களால் இயன்ற வரை திருப்பணிகளுக்கு உதவி அளிக்கின்றனர். திருச்சபையின் தொடக்கத்தில் பல பாப்புமார் களும் ஆயர்களும் குருக்களும் துறவிகளும் கிறிஸ்துவுக்காக இரத்தம் சிந்தி வேத சாட்சிக ளாயினர். வேத'கலாபனைக ளின்போது தங்கள் உயிரையே பணயம் வைத்து உழைத்த பொது நிலையினரும் பலரா வர். அவர்கள் வரிசையில் செபஸ்தியார், பங்கிராஸ், ஆக்னெஸ், லூசியா, ஆகத்தா, செசீலியா போன்றோரைக் குறிப்பிடலாம். இவர்கள் எந்த வித துறவற சபையையும் சார்ந்தவர்கள் அல்லர். ஆனால் அவர்கள் வாழ்க்கை யின் பல்வேறு துறைகளிலும் இருந்து கிறிஸ்துவுக்குச் சான்று பகன்றவர்கள். 'சீசரே கடவுள்' என்று கூறித் தூபமிடச் சொன்ன போது, 'கிறிஸ்துவே கடவுள்' என்று சான்று பகர்ந்து தம் உயிரையே கிறிஸ் துவுக்கு அர்ப்பணித்தனர்.

இத்தகையோர் நமது திருச் சபையின் ஞான சொத்துக்கள் ஆவர். அதனால் தான் இதை இங்கே குறிப்பிடுகின்றேன், திருச்சபையின் இருபது நூற் றாண்டு கால வரலாற்றில் கிறிஸ்துவில் நாம் இவர்க ளோடு இணைக்கப்பட்டிருக் கிறோம்.

### ஆதித் திருச்சபையில் பொது நிலையினர்

திருச்சபையின் தொடக்க காலத்தில் கடும் வேத கலா பனையின் போதும், தங்கள் உயிரைத் துரும்பாக எண்ணி நற்செய்தியறிவிப்பதில் கண் ணும் கருத்துமாக இருந்த பொது நிலையினரின் வீரசா கசங்களைக் கர்தினால் வைஸ் மன் (Card. Wiseman) எழுதிய ஃபபியோலா என்னும் வர லாற்றுப் புதினம் (Historical novel) அதைத் தழுவித் தமி ழில் வண. சந்தியாகப்பர் சே. ச. எழுதி வெளியிட்ட 'பங்கிராஸ் அல்லது பூர்வீக சுரங்க சபைகளின் வினோத விர்த்தாந்தம்' என்னும் நூலி லும் காணலாம். உரோமைப் பேரரசில் முதல் மூன்று நான்கு நூற்றாண்டுகளில் நிகழ்ந்த கிறிஸ்தவ மக்களின் புனித சீவி யத்தையும் வேத சாட்சிகளின் வீர வரலாற்றையும் இக் கதைகள் இருபது ஆண்டுகளில் நடந்த நிகழ்ச்சி போன்று வடித்துத் தருகின்றன.

அன்று தொட்டு இன்று வரை உலகின் பல்வேறு பகுதி களிலும் வேதசாட்சிகளான பொதுநிலையினரின் எண்ணிக் கைதான் எத்தனை! எத்தனை! இத்தகைய வேதசாட்சிகளில் குருக்கள், துறவியர், ஆயர்கள் எண்ணிக்கையை விட பொது நிலையினரின் எண்ணிக்கையே அதிகம் என்ற உண்மை பொது நிலையினரை எல்லாம் பெரு மிதம் கொள்ளச் செய்ய வேண்டும்.

16-ஆம் நூற்றாண்டிலேயே இங்கிலாந்தில் எட்டாம் ஹென்றி மன்னரின் முதலமைச் சராக இருந்த தாமஸ் மூர் அப்போஸ்தல பீடத்தின் தல மையை ஏற்றமைக்காக தம் உயிரையே இழந்தார். இவர் இல்லறத்தில் இருந்த ஒரு பொது நிலையினர் தான்.

கிறிஸ்துவுக்குச் சான்று பகர்ந்த குற்றத்துக்காக இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் ஜப்பான் நாட்டிலே, கடற்கரையோரங்களில் மக்கள் சிலுவைகளில் தொங்கினார் கள். வேதசாட்சிகளாக மரித் தார்கள்.

கடவுளை மறுக்கும் நாடு களில் கர்த்தரைக் கைவிட மறுத்து வேதசாட்சிகளாகக் கல்லறைக்குச் செல்லும் பொது நிலையினர் கணக்கிலடங்கார்.

உன்னதமான ஆன்மீகப் பணியில் கூட, நமது சேவை யைப் பிறர் புரிந்து கொள் ளவில்லையே என்று நம் உள் ளம் கேவலம் மனிதனின் பாராட்டுக்காக ஏங்கும் போது சிறு சிறு தியாகங்கள் புரிவ தற்குக் கூட தயங்கிடும் கோழைகளாக நாம் தடுமாறி டும் போது, திருச்சபை வர லாறு படைக்கும் புனிதர்கள் வேத சாட்சிகள் ஆகியோரின் வெற்றித் திருவுருவங்கள் நம் கண்முன் தோன்றட்டும்.

(நன்றி: நம் வாழ்வு 28-01-79)

## ஆசிரிய தினத்தை முன்னிட்டு

### தேசிய ரீதியில் நடைபெறும் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான

# கட்டுரைப் போட்டி

### இறுதித் திகதி 18-09-1993

★ கனிஷ்ட பிரிவு — ஆண்டு 9 — 11
**விடயம் — ஆசிரியரே நாட்டினரின் "உயிர்"**

★ சிரேஷ்ட பிரிவு — ஆண்டு 12 — 13
**விடயம் — ஆசிரியரின் மனதைப் புண்படுத்தாமை**

● எழுதவேண்டிய சொற்களின் எண்ணிக்கை.

| | | |
|---|---|---|
| சிரேஷ்ட பிரிவு | — | 1500 — 1700 வரை |
| கனிஷ்ட பிரிவு | — | 1000 — 1200 வரை |

● கட்டுரைப் போட்டிக்கான விண்ணப்பப் பத்திரங்கள் ரூபா ஒன்றிற்கு யாழ். மறைக்கல்வி நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

● மேலதிக விபரங்களுக்கு பாடசாலை அதிபர்களோடு அல் லது மறைக்கல்வி நிலையத்தோடு தொடர்பு கொள்ளவும்.

ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்

இயக்குனர்
மறைக்கல்வி நிலையம்

# மாறிடுவோம்-மாற்றிடுவோம்

மாண்பு மிகு மக்களே
மாபரன் படைப்புக்களே
மானமுள்ள தமிழர்களே – கொஞ்சம்
மண்டியிட்டே கேளுங்கள்
பாவச்சேற்றில் புரள்கின்றீர்
பரமனை நீர் வெறுக்கின்றீர்
பகைவனை நீர் அழிக்கின்றீர்
பழிதீர்க்க விரைகின்றீர்
சாதிமத குலங்களாலே
சாட்டைகள் தான் பின்னி
சாடுகின்றீர் அவர்களையே
சாகும் வரை விளாசுகின்றீர்
தட்டிக் கேட்டு விட்டால்
தட்டியே விடுகின்றீர்.
தமிழனென்றும் பாராமல் – அவன்
தவற்றினைப் பார்க்கின்றீர்.
இந்நிலையை மாற்றிடவே
இணைந்திடுவீர் இளைஞர்களே
மாறிடுவோம் மாற்றிடுவோம்
மனமாசுதனை மாற்றிடுவோம்.

A. ஜெறோம் புஷ்பராஜா, தவசிகுளம், மிருசுவில்.

# வாழ்த்துக்கள் - பாராட்டுக்கள் - நன்றிகள்

## தியாகம் நிறைந்த பணி

எமது மறைமாவட்டத்தில் மறை ஆசிரியர்கள், நிரந்தரமாகவும், முழுநேரமாகவும் பகுதிநேரமாகவும் பணியாற்றி வருகின்றனர். மறைக்கல்வி ஊட்டும் பணியில் இவர்கள் எமது மக்களுக்கு அளப்பரிய பங்காற்றி வந்திருக்கின்றனர்.

நிரந்தர மறையாசிரியர்களான திரு. எஸ். எவ். சவுந்தரநாயகம், திரு. கி. பங்கிராஸ் ஆகியோர் தமது மறைஆசிரியப் பணியில் 25 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளனர். இவர்களுக்கு எம் உளம் கனிந்த வாழ்த்துக்கள்.

இவர்கள் இம்மறைமாவட்டத்தின் பல பங்குகளில் இளமைத்துடிப்புடன் பணியாற்றியது குறிப்பிடத்தக்கது. கடந்த சில ஆண்டுகளாக யாழ் மறைக்கல்வி நிலையத்தில் மறை ஆசிரியர்களை உருவாக்கும் பணியிலும் சிறப்பான முறையில் தமது பங்களிப்பைக் கொடுத்து வருகின்றனர்.

இவர்களது தியாகம் நிறைந்த பணிக்கு இத்தருணத்தில் எமது பாராட்டுக்களைத் தெரிவித்து நன்றி கூறுகின்றோம். இவர்களது பணி எமது மறைமாவட்டத்தில் பல்லாண்டு நீடிக்க வேண்டுமென இறை அருள் வேண்டி நிற்கின்றோம்.

+ **தோமஸ் சவுந்தரநாயகம்**
யாழ். ஆயர்

## ஈடுசெய்ய முடியாத முழுநேரப்பணி

சென்னை பூந்தமல்லியில் பயிற்சி பெற்று தமது மறைப் பணியில் 25 வருட நிறைவை எய்தும் எமது மறை மாவட்டத்தின் இரு நிரந்தர மறை ஆசிரியர்களின் வெள்ளிவிழா நிகழ்விலே அவர்களால் செய்யப்பட்ட பணியினை வெளிப்படையாக பாராட்டுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் முன்னேறிக்கொண்டிருந்த கால கட்டத்தில் மறைந்த ஆயர் எமிலியானுஸ்பிள்ளை அவர்கள் பொதுநிலையினரை மறை ஆசிரியராகப் பயிற்றுவிக்கும் எண்ணத்தை மனதில் கொண்டு இந்த இளைஞரை இந்தியாவிற்கு பயிற்சிக்காக அனுப்பினார். தமது அர்ப்பணம் நிறைந்த வாழ்வினாலும் பணியினாலும் மறைந்த ஆயரின் இறைவாக்குத் தன்மை கொண்ட முதன்மைத்துவத்தின் பயனை நிருபித்து விட்டனர்.

பகுதி நேர இளம் மறை ஆசிரியர்கள் எமது மறை மாவட்டத்தில் பயிற்றுவிக்கப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டாலும் அப்பணிப்புள்ள பயிற்சி பெற்ற நிரந்தர மறை ஆசிரியரின் வெற்றிடம் ஈடுசெய்யப்பட முடியாததொன்று. எதிர்காலத்தில் பல இளைஞர்கள் முழு நேர மறைப்பணியில் தம்மை அர்ப்பணிக்கும் அழைப்பை உணரவும் எமது மறைமாவட்டம் அவர்களைப் பயிற்றுவித்து உருவாக்கி பொருளாதார ரீதியில் அவர்களுக்கு உதவியளிப்பதன் மூலம் அவர்கள் சாட்சியமுள்ள குடும்ப வாழ்வு வாழவும் இறைவனின் அரசைப் பரப்புவதில் தம்மை ஈடுபடுத்துவார்கள் என்பதே எமது உறுதியான நம்பிக்கையாகும்.

அருட் திரு. அன்ரன் இராசநாயகம்
யாழ். மறைக்கோட்ட குரு முதல்வர்

## பணித்தளத்தில் குருக்களின் பக்கபலம்

2 ஆம் வத்திக்கான் சங்கம் முடிவடைவதற்கு முன்னரே தொலைநோக்குடன் செயற்பட்ட மறைந்த அதி. வந்தனைக்குரிய எமிலியானுஸ் பிள்ளை ஆண்டகை அவர்கள் தமிழ் நாட்டு முற்போக்கு செயற்பாடுகளுடன் இணைந்து செயற்பட்டார். ஆன்மீக பற்றுக் கொண்ட சில வாலிபர்களைத் தெரிந்து, தமிழ் நாட்டில் திண்டிவனத்திலும், பூந்தமல்லியிலும் பயிற்றுவித்தெடுத்தார். குரு மாணவர்கள் மட்டில் எவ்வாறு அக்கறை காட்டினாரோ, அந்த அளவு இவர்கள் மட்டிலும் காட்டினார். மாதாமாதம் இவர்களைச் சந்தித்து கஷ்ட துன்பங்களைக் கேட்டறிந்து கூடுமானவரை அவைகளைப் போக்கி, உற்சாகமூட்டி வழிநடத்தி வந்தார்.

ஆரம்பத்தில் 18 மறை ஆசிரியர்கள் பணிக்களத்தில் குருக்களுக்குப் பக்கபலமாகப் பணி புரிந்தனர். இவர்கள் தங்கள் வாழ்வாலும், சொல்லாலும் கிறிஸ்துவுக்குச் சான்றுபகர்ந்து தலத் திருச்சபையைக் கட்டியெழுப்பத் துணைபுரிந்தனர். இடையே பல வித காரணங்களால் இவர்கள் தொகை அருகி வந்தது. இது மிகவும் கவலைக்குரிய ஒன்றாகும். ஆவியானவர் பொது நிலையினர் மத்தியில் பொழிந்த அருங்கொடைகளை பொறுப்பான தலைவர்கள் இனம் கண்டு ஊக்குவித்து வளர்ப்பது இன்றியமையாததாகும்.

மீளவும் இவர்கள் தொகையிலும், வகையிலும் வளர வேண்டும். ஆயர் தொட்டு ஒவ்வொரு குருவும் துறவியும் ஏற்ற ஊக்குவிப்பும், மதிப்பும், வாழ்க்கை வசதியும் இவர்களுக்குச் செய்ய வேண்டும்.

எனவே மறை ஆசிரியர் பணிக்கு புதிய அழைத்தல்களை விடுவிப்பதும், தகுந்த முறையில் அவர்களைப் பயிற்றுவித்துப் பயன்படுத்துவதும் இம் மறை மாவட்டத்தைச் சார்ந்த அனைவரதும், சிறப்பாகத் தலைவர்களினதும் பொறுப்பாகும்.

அருட்திரு.
**S. J. இம்மனுவேல்**
யாழ் மறைமாவட்ட
பிரதம குரு (V. G.)

## பொதுநிலைக் குருத்துவத்தின் முன்னோடிகள்

திருச்சபையின் மறைபோதகப் பணியின் மகத்துவத்தை உணர்ந்து தம்மை முழுநேரப் பணிக்கு அர்ப்பணித்த ஒரு சில பொதுநிலையினரின் வரிசையிலே திரு எஸ் எவ். சவுந்தரம், திரு. கி, பங்கிராஸ் ஆகியோர் இன்று வெள்ளிவிழாக் காணும் பாக்கியம் பெற்றுள்ளனர்.

இவர்கள் பங்குத் தளங்களில் குருக்களுக்கு வலக்கரமாய்த் தோளோடு தோள் கொடுத்துத் தர்க்கப்-பிரசங்கங்கள், மறைஅறிவுப் பயிற்சிப் பாசறைகள் முதலாம் சமயப் பணிகளை சுமுத்திரையாய் நிறைவேற்றியமை வெள்ளிடை மலை.

தமிழ் பேசப்படும் இடங்கள் தோறும் சேவையாற்றத் தேவையான மறை ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதிலும் தொடர்ந்து அவர்களை ஊக்குவிப்பதிலும் இவர்கள் மிகுந்த ஈடுபாடு கொண்டு பணிபுரிவது யாவரும் அறிந்ததே. இவர்கள் சேவை சிறுவர் தொட்டு முதியோர் வரை எட்டியுள்ளது எனில் மிகையாகாது.

யாழ் மறைமாவட்டப் பொது நிலையினர் கழகத்திற்கும், கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்திற்கும் இவர்கள் வழங்கிய ஆலோசனைகளும், பங்களிப்பும், சேவைகளும் மிகப் பல.

அன்பும் பரிவும், அயரா உழைப்பும், அனைவரும் சமமே எனும் பொதுநிலைப் போக்கும் இவ்விருவரதும் மங்கா அணிகலன்களாகும். கடமையில் கண்ணியம், உண்மையில் உறுதி, எண்ணியதை எண்ணியவாறு திண்ணிய மனத்துடன் நிறைவேற்றும் திடசித்தம் முதலியவற்றை இவர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

இம் மறை ஆசான்கள் இருவரும் இன்னும் பல்லாண்டு எம் மத்தியில் பணி புரிந்து இறை பணியின் ஏந்தல்களாக வாழப் பொதுநிலையினர் சார்பாக இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

எ. எஸ். அகஸ்ரின்
ஆசிரியர்

## வரப்பிரசாதத்தின் வாய்க்கால்கள்

கடந்த 25 ஆண்டுகளாக எமது மறைமாவட்டத்தில் பணியாற்றி வெள்ளிவிழாவைக் கொண்டாடும் திரு. எஸ். எவ். சவுந்தரம், திரு. கி. பங்கிராஸ் அவர்களை வாழ்த்துவதில் மறைக்கல்வி இயக்குநர் என்ற ரீதியில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

பொதுநிலையினரின் பொற்காலமென அழைக்கப்படும் இக்காலத்தில் இவர்களின் சேவை, மறைப்பணி எமது மறைமாவட்டத்திற்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்ததென்றால் மிகையில்லை.

பல்வேறு பணித்தளங்களில் பல கடினமான வாழ்க்கைப் பயணத்தை மேற்கொண்டு இறையரசுப் பணியில் ஆர்வமாக, வாஞ்சையோடு உழைத்ததின் பயனாக இவர்களின் சேவையை அனுபவித்த மக்கள் மறை ஆசிரியர்கள், மாணவச் செல்வங்கள் இதற்குச் சான்று பகர்வர்.

இந்நாளில் இவர்களை வாழ்த்தி, பாராட்டி, எதிர் நீச்சல்கள் மத்தியில் திடமனத்துடனும், இறை பலத்துடனும் இன்னும் பல ஆண்டுகள் எமது மறைமாவட்டத்தில் பணியாற்ற வேண்டுமென வாழ்த்துகிறேன்.

அருட்திரு
ஆர். எச். சகாயநாயகம்,
மறைக்கல்வி நிலைய இயக்குநர்

## அப்போஸ்தலிக்க சேவையின் வழிகாட்டிகள்

"நற்செய்தியைப் போதிப்பவர்களின் மலரடிகள் எத்துணை அழகானவை" என்பதற்கொப்ப கடந்த 25 வருடங்களாகக் கடமை எனக் கருதாது சேவை எனக் கருதி செயற்பட்ட திரு. கி. பங்கிராஸ் அவர்களையும், திரு. எஸ். எவ். சவுந்தரம் அவர்களையும் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இவ்விருவரது பணிகளைப் பற்றி எடுத்தியம்ப தகுதியுடையவன் என நான் நினைக்கின்றேன். காரணம் 1985லிருந்து 1989வரையிலான கால்கட்டத்தில் மறைக்கல்வி நிலையத்தில் எனது பணியின் உடன் உழைப்பாளிகளாக இருந்தவர்கள். அந்தக் காலகட்டம் இந்திய சமாதானப் படையின் கெடுபிடிகளின் காலகட்டம். இக்கட்டான நிலையிலும் கூட திரு. எஸ். எவ். சவுந்தரம் அவர்கள் மறைக்கல்விப் பணியிலும், திரு. கி. பங்கிராஸ் அவர்கள் வேதாகமப் பணியிலும் மறைக்கல்வி நிலையத்தின் பணிகள் தொய்ந்து போகாது செயலாற்றினார்கள். மேலும் பொதுநிலையினரின் அப்போஸ்தலிக்க சேவைக்கு ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தார்கள். இவர்களைப் பின்பற்ற பல மறை ஆசிரியர்களை உருவாக்கினார்கள். இம்மாபெரும் சேவைக்கு எமது மறைமாவட்டமானது நன்றிப் பெருக்கோடு இவர்களை வாழ்த்துகின்றது.

அருட்திரு
ஆர். எம். ஜி. நேசநாயகம்
முன்னாள் இயக்குநர்

## சிறந்த ஓர் எடுத்துக்காட்டு

மறை ஆசிரியர்களான திருவாளர்கள் பங்கிராஸ், சவுந்தரம் ஆகிய இருவரையும் அவர்களது பணியில் ஆரம்ப காலத்தில் இருந்தே நன்கு அறிந்தவனாய் இருக்கிறேன்.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் அறிவுரைக்கொப்ப பொது நிலையினர் நற்செய்தியினை அறிவிக்கும் அப்போஸ்தலர்களாக வாழ முடியும் என்பதற்கு இவர்கள் இருவரும் சிறந்த எடுத்துக்காட்டு. தமது குடும்பப் பொறுப்புகளுடன் பல சிரமங்கள் மத்தியிலும் மனந்தளராது திருச்சபைக்கு இவர்கள் ஆற்றிய பணியை நாம் ஒரு போதும் மறக்க முடியாது. இவர்களையும் இவர்கள் குடும்பங்களையும் இறைவன் ஆசீர்வதித்து தொடர்ந்தும் இவர்கள் தம் பணியைத் தொடர வழிநடத்துவாராக.

அருள் திரு. ஜே. நீக்கிலஸ்
முன்னாள் இயக்குநர்



## ஆரோக்கிய அன்னை
## (வேளாங்கண்ணி மாதா)
### சிற்றாலய விழா

யாழ். அரச போதனா வைத்தியசாலை

★ புரட்டாதி 23ஆம், 24ஆம், 25ஆம் திகதிகளில் மாலை 5–15மணிக்கு திருப்பலியும் விசேட ஆசீர்களும் இடம்பெறும்.

★ புரட்டாதி 26ஆம் நாள் ஞாயிறுதினம் காலை 6-30 மணிக்கு யாழ். ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் தலைமையில் திருநாட் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். நன்றி

அன்புடன் அழைக்கும்
வைத்தியசாலை ஆன்மகுரு

# திருத்தலச் சுற்றுலா-2



★ 'யோனா'

உரோமையிலுள்ள 450 கோவில்கட்கெல்லாம் தலைமையாக இருப்பது புனித இராயப்பர் பேராலயம். இந்தப் பேராலயத்தின் முன் புறமுள்ள "வீயாடெல்லா கொன்சிலியாசியோனே" எனும் வீதி மிகவும் அகலமானது. அதன் இரு புறங்களிலும் கடைகள் உண்டு. அக்கடைகளில் நினைவுச் சின்னங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

**புனித இராயப்பர் சதுக்கம்:**

பேராலயத்தின் முன் மிகப் பெரிய சதுக்கம் காணப்படுகின்றது. இதனைப் புனித இராயப்பர் சதுக்கம் என்று அழைக்கின்றனர். இச் சதுக்கத்தில் பல நூறாயிரம் மக்கள் கூடலாம். இதன் நாற்புறமும் 284 பிரமாண்டமான தூண்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. இவைகளைக் கொண்டு கட்டப்டிருக்கும் சுற்று மண்டபத்தில் மறைந்த பாப்பிறைகள் 140 பேர்களின் உருவச் சிலைகளைக் காணலாம். இம் மண்டபத்தை நிறுவியவர் புகழ் பெற்ற ஜான் லொரன்சோ பெரினி என்ற கட்டிடக் கலைஞர் என்று வரலாறு கூறுகின்றது. சதுக்கத்தின் நடுவே நீரூற்றுக்கள் எப்போதும் வழிந்து மெருகூட்டிக் கொண்டிருக்கிறது.

**புனித இராயப்பர் பேராலயம்:**

புனித இராயப்பர் சதுக்கத்தின் நடுவே, வானளாவிய ஆலயமாக விளங்குவதுதான் புனித இராயப்பர் பேராலயம் (St. Peter's Basilica) என்பது. இதனைச் சுற்றியுள்ள கட்டிடங்கள் யாவும் வானளாவி நிற்பதால் இந்த ஆலயத்தின் பிரமாண்டமான தன்மையை முதலில் உணர்ந்து கொள்ள முடியாது. இக்கோவிலின் விமானம் (Dome) மிகப் பெரியது. உரோமையில் எங்கிருந்து நோக்கினாலும் இவ்விமானத்தைக் கண்டு மெய் சிலிர்க்கலாம்.

புனித இராயப்பர் இயேசுவைப் போலவே சிலுவை மரணத்தைத் தழுவியவர். அவர் தம் புனித உடல் புதைக்கப்பட்ட இடத்தில் தான் இப் பேராலயம் எழும்பி நிற்கிறது. சுரங்கப் பாதையில் இறங்கி அவர் தம் கல்லறையைச் சந்திக்க வாய்ப்பு இருக்கிறது. இவ்வாலயத்தில் 160 பாப்புமாரின் புனித உடல் அடக்கம் செய்யப் பட்டிருக்கிறது. இப் பேராலயத்தின் நடுக்கதவு 25 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் திறக்கப்படும். அதற்கு புனிதக் கதவு (Porta Santa) என்று பெயர். அக்கதவு ஒவ்வொரு யூபிலி ஆண்டுத் தொடக்கத்தில் திறக்கப்படும் போது பாப்பரசர் முதலில் அதனுள் நுழைவார். பிறகு கர்தினால்மார்கள், பேராயர்கள், ஆயர்கள் வரிசையாக நுழைவார்கள். அந்த ஆண்டு இறுதியில் மீண்டும் கதவு மூடப்படும்.

இவ்வாலயத்துள் ஒரே சமயத்தில் 43 ஆயிரம் பேர்கள் அமர்ந்து வழிபாட்டு நிகழ்ச்சிகளில் பங்கு பெறலாம். கோவிலில் உள்ள 4 பெருந் தூண்களில் புனித வெரோனிக்கா, புனித அன்ட்ரு, புனித ஹெலனா, புனித வலங்கினஸ் என்ற நான்கு புனிதர்களின் உருவம் செதுக்கப் பட்டிருக்கிறது. பேராலயத்தினுள்ள உருவச் சிலைகள் அனைத்தும் பிரமாண்டமானவை. அவைகளில் மைக்கல் ஆஞ்சலோ வடித்த பியட்டா (Pieta) என்ற வியாகுல அன்னைச் சிற்பம் உலக மக்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்து நிற்கின்றது. மரியன்னையின் மரித்த மகன் இயேசு துவண்டு கிடக்கும் காட்சி பாப்பவர் உள்ளத்தை உருக்கும்.

(தொடரும் காட்சி:
"பியெட்டா" Pieta)

---

இலங்கை இனப்பிரச்சனை — வத்திக்கான் வானொலியின் ஒரு கண்ணோட்டம்

# ஐக்கிய நாட்டு மனித நேயம் படைத்த நாடுகள் குரல் கொடுக்க வேண்டும்

★ இந்தியப் பெருமகன் ஒருவர் கடந்த வாரம் வடித்த இரத்தக்கண்ணீர்

இன்றும் இலங்கையில் உள்நாட்டுப்போர் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

வன்முறைகள் தொடர்கின்றன. இலங்கையில் மட்டுமல்ல, உலகின் பல்வேறு நாடுகளில் கருத்துமோதல்கள், ஆசைமோதல்கள், ஆயுத மோதல்கள், என நிலமை சீர்கெட்டு வருகின்றது. இதனால் துன்புறுவது, அகதிகளாவது அப்பாவிப் பொது மக்களே. இதை இரு தரப்பினரும் உணர்ந்தால் இன்று மக்கள் அகதிகளாவதைத் தடை செய்யலாம். மனிதனை மனிதனாக மனித மாண்புடன் வாழவைக்க உதவலாம். அதற்கு மனிதன் தான் உதவமுடியும். அப்படி உதவுபவனே மனிதனாக இருக்க முடியும்.

யாழ்ப்பாணத் தமிழர்கள் என்ற வகையில் பொதுவாக ஈழத்தமிழர்கள் ஏறக்குறைய 15 இலட்சம் பேர் இருக்கிறார்கள். இஸ்லாமியத் தமிழர்கள் 10 இலட்சம் பேர் இருக்கிறார்கள் இலங்கை என்ற அந்தப் பெரிய நாட்டில் 35 இலட்சம் பேர் தமிழர் என்று சொன்னால் 70 இலட்சம் பேர்தான் சிங்களவர். அவர்கள் இன்றும் சரியாகச் செயல்பட்டிருந்தால் இந்தச் சிக்கல்களுக்கெல்லாம் ஆளாகாமல் ஒரு நல்ல அழகிய நாடாக இலங்கையைத் திகழ வைத்திருக்கலாம். ஆனால் எதிர்பாராத ஒரு இனச் சிக்கல் ஏற்பட்ட காரணத்தினால் இன்றைக்கு தமிழர்களும் நலம் புரியவில்லை. அங்கிருக்கின்ற இலங்கைக் குடியரசும் சிறப்பான பெயரையோ, வளத்தையோ, நலத்தையோ நாட்ட முடியாத ஒரு சிக்கல் ஏற்பட்டிருக்கிறது.

இது எல்லாத் தரத்தினருக்கும், பாதிக்கப் பட்டவருக்கும், "ஆகா! இப்படி ஒரு நாடு வீணாகி விட்டதே," என்று நினைப்பவருக்கும் வருத்தத்தைத்தான் தருகிறது.

உள்ளபடியே சொல்லுகிறேன். சிங்கப்பூர் மிகச் சிறிய நாடு. ஆனால் 73 விழுக்காடுகள் சீனர்கள் இருக்கின்ற அவர்களுக்கும், 18 விழுக்காடு அந்த மண்ணின் மைந்தர்களாக இருக்கின்ற மலேசிய மக்களுக்கும், நான்கே விழுக்காடுகள் இருக்கின்ற தமிழர்களுக்கும் சம உரிமை கொடுத்து, இந்த மூன்று மொழிகளும், அதே நேரத்தில் உலக மொழியாகிய ஆங்கிலமும் ஒரே நேரத்தில் ஆட்சி மொழிகளாக ஆக்கப்படுகின்ற அளவிற்கு அங்கு ஒரு சுமுகமான அரசு நடை பெறுகின்றது என்று எண்ணிப் பார்க்கிறோம்.

ஒரு காலத்தில் தமிழன் அருமையான பழமொழியை வைத்திருந்தான். "திரை கடலோடியும் திரவியம் தேடு" என்று. அது நல்ல பழமொழிதான். அண்டைக்குப் பண்டைய உறவுகள் இருந்தன. இன்றும் சரியாகச் சொல்லப்போனால் இன்று உலகப் புகழ் பெற்ற இந்த ரோமாபுரியோடு தமிழர்கள் வைத்த வணிக உறவை உலகமெல்லாம் அறியும்.

சிலப்பதிகாரத்தைப் பார்த்தால் அங்கே பூம்புகார் கடற்கரை செய்தி படைக்கின்றது. இப்படிப் பார்த்தால் இன்று மக்கள் வணிகத்திற்காகவா? வாழ்வுக்காகவா, என்று சொன்னால் இல்லை, அடித்துத் துரத்தப்பட்டு வாழ வழியில்லாத நிலையில் தங்களது கை, கால்களை இழந்து முடமாகப் போனவர்கள், அதே நேரத்தில் அந்த மண்ணில் தொடர்ந்து வீசப்படுகின்ற குண்டு வீச்சுக்கு ஆளாக முடியாமல் தப்பித்துப் போகின்றவர்கள் உயிர் வாழ வேண்டுமே என்ற ஆதங்கத்திலே ஓடிக் கொண்டிருக்கிறவர்கள். இன்று அகதிகளாகத் தமிழர்கள் வாழ்கிறார்கள் என்று நினைக்கின்ற பொழுது ஒரு தமிழ்க் குடிமகன் என்ற வகையில் நான் உள்ளபடியே கண்ணீர் விடவில்லை. நான் இரத்தக் கண்ணீர் வடிக்கின்றேன்.

அந்த நிலையில் மனித நேயம் படைத்த பல நாடுகள் அவர்களுக்கு உதவுகின்றன என்பதை மறுக்கவில்லை. அதனால் தான் இன்றைக்காவது பேர்லினிலும் சரி, பாரிசிலும் சரி, ரோமாபுரியிலும் சரி இன்னும் எத்தனையோ நாடுகள் நாங்கள் சுற்றி வருகின்ற போது தமிழர்கள் இங்காவது நின்று கொஞ்ச வாய்ப்போடு இருக்கிறார்களே, கொஞ்ச நலத்தோடு வாழ்கிறார்களே என்று நினைத்து பெருமைப் பட வேண்டி இருக்கின்றது.

அந்தளவுக்கு தமிழர்களுடைய பிரச்சனைகள் தீர்க்கப் படாமல் எங்கேயே இருக்கின்ற ஈழத்தில் குண்டு ஓசை கேட்கின்ற போது, இங்கிருப்பவர்கள் திகைக்கின்ற அதே நேரத்தில் அலறித் துடிக்கின்ற அந்த நிலமைகள் இன்றைக்கும் தொடர்கின்றன. அங்கே எண்ணற்ற தமிழ் அறிஞர்கள் ஆறுமுகநாவலர் போன்றோரெல்லாம் தோன்றி இலக்கணத்தைச் செய்திருந்தார்கள். சி. வை. தாமோதரம்பிள்ளை போன்றவர்களெல்லாம் தோன்றி எத்தனையோ தமிழர்களுடைய எழுத்துக்களைப் பதிப்பித்துச் சென்றார்கள். இந்தச் சிறப்புக்கள் மீண்டும் பெறக்கூடிய அளவிற்கு ஒரு நல்ல சூழல் அவர்களுக்கு வர வேண்டும். ஆனால் பெர்லின் மகாநாட்டிற்குப் போகிற போது பாரிசுக்குவருகிறபோது, உரோமாபுரிக்கு வருகிற போது அங்கெல்லாம் தமிழர்களைப் பார்க்கிறோம். வந்திருக்கிற தமிழர்களில் பெரும்பாலானவர்கள் ஈழத்தமிழர் என்று சொன்னால் அவர்களெல்லாம் இன்றும் பதை பதைப்போடு நாங்கள் வந்து நிலையான குடியிருப்பில் இல்லை, எங்கோ ஒரு இடத்தில் அகதியாகத்தான் வாழ்கிறோம் என்ற உணர்வோடு வாழும் போதுதான் நமக்கு வருத்தம் ஏற்படுகின்றது.

என்னுடைய தமிழன் ஒருவன் இன்னொரு இடத்தில் இப்படித் துன்பப் படுகிறானே, என்று நினைக்கிற போது வேதனை கக்கிக் கொள்கிறது. அந்தச் சூழல் மாறி ஒரு நல்ல சூழல் உருவாகி உலக நாடுகள் குறிப்பாக ஐக்கிய நாட்டு அவையில் இருக்கிற மனித நேயம் படைத்த நாடுகள் எல்லாம் அதற்குக் குரல் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு ஒரு நல்ல வாழ்வு அமைத்துத் தருவதற்கு ஒரு சிறப்பான ஏற்பாட்டைச் செய்தால் உள்ளபடி தமிழன் மீண்டும் தலை நிமிர்ந்து வாழ்வான். அப்படி வாழ்கிறபோது உலகமெங்கும் இருக்கின்ற தமிழன் வணிகத்தில் நிமிர்ந்திருக்கிறான், கலையில் சிறந்திருக்கிறான், இலக்கியத்தில் வளர்ந்து நிற்கிறான் என்று சொல்லக் கூடிய அளவிற்கு பெருமை பெறுவான் என்பதனால் எங்கு பார்த்தாலும் தமிழன் அகதியாக அலைகிறான் என்ற சூழல் என்றைக்காவது மாறும் என்று நம்புகிறேன், அப்படி நம்பக் கூடிய சூழ்நிலையில் தான் எங்களைப் போன்றவர்கள் தொடர்ந்து பணியாற்றுகிறோம், அவர்களுக்கான உதவிக்கரம் நீட்டுகிறோம், அந்த அளவிற்கு மனித நேயத்தோடு அனைவரும் அந்த உதவிக்கரத்தை நீட்ட வேண்டும், குரல் கொடுக்க வேண்டும், அவர்களுக்கு நல்ல வாழ்வை அமைத்துத்தர வேண்டும் என்று விரும்புவது நம் அனைவருக்கும் கடமையாகின்றது.

● தொகுப்பு : R. அதிதி

---

## 150வருட உற்ச...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சனிக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலிப் பூசை ஆரம்பமாகியது. இலட்சக் கணக்கான பக்தர்கள் ஆலய முன்றலில் கூடி நிற்க பான்ட் வாத்தியம் இசைக்க அருட்சகோதரிகள், துறவிகள், குருக்கள் சகிதம் இலங்கையின் ஒன்பது கத்தோலிக்க ஆயர்களும், கொழும்பு அதி மேற்றாணியார் நீக்கலஸ் மார்க்கஸ் பர்னாந்து தலைமைதாங்க பரிசுத்த தந்தையின் இலங்கைப் பிரதிநிதியுடன் போர்ட்டிக்கோ மண்டபத்தை வந்தடைந்தனர்.

இத் திருப்பலியின் செபங்கள், பாடல்கள், திருவாசகங்கள் ஆகியன தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் மாறி மாறி நடத்தப்பட்டன. சிங்கள மொழியில் மறையுரை ஆற்றினார் அதிவணக்கத்திற்குரிய மார்க்கஸ் பெர்னாந்து, சிலாப ஆயர். இப்புனித யாத்திரைத் தலத்தின் வரலாற்றுச் சிறப்பையும் 150 வருடங்கள் யூபிலியின் பொருத்தத்தையும், பக்தர்கள் கொண்டிருக்சு வேண்டிய விசுவாச உறுதிப்பாட்டைப் பற்றியும் தமது மறையுரையில் எடுத்துரைத்தார். அதைத் தொடர்ந்து தமிழ் மொழியில் மறையுரை ஆற்றிய அதி வணக்கத்திற்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் இந்நாளின் சிறப்பையும் கிறிஸ்தவர்கள் இறைமகன் இயேசுவில் கொண்டிருக்க வேண்டிய இறை அனுபவத்தைப் பற்றியும் அதன் தேவையையும் வலியுறுத்திக் கூறினார். காணிக்கைப் பவனியின் போது தலையில் மலர் சூடி, வண்ண ஆடை தரித்த 24 சிறுமியர்கள் கரங்களில் மலர் ஏந்தி நடனமாடி காணிக்கைப் பவனியில் கலந்தவர்களை அழைத்து வந்தது கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

நற்கருணை விருந்தின் போது மறைமாவட்டத் தேவையை முன்வைத்து பங்குகளிலிருந்து தெரிவு செய்யப் பட்டு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு முன் கூட்டியே ஆயத்தப்படுத்தப்பட்ட 24 ஆண்களுக்கு நற்கருணையின் சிறப்புத் திருப்பணியாளர்களாக செயற்பட அனுமதிவழங்கப் பட்டது. வெள்ளாடை அணிந்த இவர்கள் நற்கருணை வழங்குவதில் கலந்து கொண்டனர். இவர்கள் தமது பங்கு ஆலயங்களில் நற்கருணையின் சிறப்புத் திருப்பணியாளர்களாக தொண்டாற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. திருப்பலி முடிந்ததும் கப்பல் போல் அமைந்த அழகிய தேரில் சந்தானாள் நாயகியின் திருச் சுரூபம் மக்கள் மத்தியில் பவனியாகக் கொண்டு வரப்பட்டது. ஆயர்கள் அனைவரும் இரு மருங்குகளிலும் அணிவகுத்துவர, மக்கள் பெரு வெள்ளம் பக்தி அருட்சியால் மெய்மறந்து நிற்க, ஆலய முன்றலில் வந்த பவனி உள்ளத்தை உருக்கும் நிகழ்ச்சியாக அமைந்தது. பரிசுத்த தந்தையின் பிரதிநிதி திருச்சுரூப ஆசீர் வழங்க 150 ஆவது உற்சவம் இனிதே நிறைவுற்றது.

## சமூக ஒன்றிப்பு

ஒரு சமுதாயத்தின் முன்னேற்றம் அவர்களின் உழைப்பிலே, ஒற்றுமையான வாழ்விலே தங்கியுள்ளது சமுதாயம் முன்னேற வேண்டுமானால் எமக்குள் உறவுவேண்டும். புரிந்துணர்வு வேண்டும். எமது மனித பலவீனத்தால் நாம் எமக்குள்ளேயே பிளவுகள் ஏற்படுத்திக் கொள்ளுகின்றோம். இந்த ரீதியில் எமக்குள் பிரிந்து கிடக்கும் பிளவுகளை நீக்கி ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து சமூக உணர்வை எம்மிடையே வளர்க்க வேண்டும்.

ஆதிக்கிறிஸ்தவ சமூகத்தை எடுத்து நோக்கும் போது அவர்கள் எல்லோரும் ஒரே சமூகமாய் வாழ்ந்தார்கள். அவர்களிடையே, ஏழை, பணக்காரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பாகுபாடு இருக்கவில்லை. மாறாக எல்லோரும் தேவைக்கேற்ப பகிர்ந்தும், ஒருவர் ஒருவரைப் புரிந்து கொண்டும் யாவரும் வாழத்தக்கவிதமாய் வாழ்க்கை முறைகளை மாற்றி ஒருவர் ஒருவர்க்கு உறுதுணையாக இருந்து செயற்பட்டார்கள்.

# ஒருவர் ஒருவரோடு ஒத்துழைப்பதற்கான வழி

மறைவட்டங்களில் நற்செய்தியை அறிவித்துப் புனிதப்படுத்தும் துறையிலோ, பிறரன்பு சமுதாயத்துறைகளிலோ வேறு துறைகளிலோ திருச்சபை ஆற்றும் மறைத்தூது அலுவல்களில் உதவும் படியாக முடிந்த மட்டும் சில அறிவுரைக் குழுக்களை அமைக்க வேண்டும். இவற்றில் குரு குலத்தாரும், துறவியரும், பொது நிலையினரோடு தக்கபடி ஒத்துழைப்பார்களாக. இந்த அறிவுரைக் குழுக்களால் வெவ்வேறு பொது நிலையினர் கழகங்களும் இவை மேற்கொள்ளும் முயற்சிகளும் இணைந்து இயங்கும்படி உதவமுடியும். இக்கழகங்கள் ஒவ்வொன்றின் தனிப்பண்பும் தனித்தியங்கும் தன்மையும் பாதிக்கப்படுவதில்லை.

இத்தகைய அறிவுரைக் குழுக்கள் முடிந்த மட்டும் ஒவ்வொரு பங்கிலும், பல பங்குகளுக்கிடையேயும், பல மறைமாவட்டங்களுக்கிடையேயும், நாட்டளவிலும் அனைத்துலக அளவிலும் கூட நிறுவப்பட வேண்டும்.

**பொதுநிலையினரின் மறைத்தூதுப்பணி எண்.26**

---

இன்று எம்மிடையே தொடர் நிகழ்வுகளாக இழையோடிக் கொண்டிருக்கின்ற வேற்றுமைகள், பாகுபாடுகள், ஏற்றத்தாழ்வுகள், எம்மை மீண்டும் மீண்டும் முன்னேற விடாது தடைக்கற்களாக உள்ளன.

இவ்வாறு தடைக்கற்கள் சமூகஒற்றுமைக்குத் தடையாக உள்ளன. இவ்வாறான தன்மையை ஒரு சமூகம் தன்னுள் கொண்டிருக்கும் வரை அதன் செயற்பாடுகள் மாறுபட்டதாகவே காணப்படும்.

எனவே எம்மிடையே ஒற்றுமை மலர வேண்டும். எமக்குள் புரிந்துணர்வும், ஒருவர் ஒருவரின் கருத்துக்களை மன நிறைவுடன் ஏற்றுக்கொள்ளும் சக்தியும் ஒருங்கிணைந்த செயற்பாடும் மிகமிக அவசியமாகும்.

A. ஜெறோம் புஸ்பராசா
தவசிகுளம், மிருசுவில்.

# பால்ரிக் குடியரசு பற்றிய சில தகவல்கள்

லிற்றுவேனியா நாட்டில் 1417 இல் கத்தோலிக்கம் அரச மதமாக அறிவிக்கப்பட்டது. 1919 ஆம் ஆண்டில் லிற்றுவேனியா சுதந்திர நாடாகஇருக்கத்தொடங்கியதிலிருந்து கத்தோலிக்கமும் மலர்ந்தது.

1940 ஆம் ஆண்டில் ரஷ்ஷியப் படைகள் லிற்றுவேனியாவை ஆக்கிரமித்த போது கூட 90 விழுக்காட்டினர் கத்தோலிக்கராக இருந்தனர். அச்சமயத்தில் திரு ஆட்சிப் பீடங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. 6 மறைமாவட்டங்களும் 4 குருத்துவக் கல்லூரிகளும் 1520 குருக்களும் 700 அருட்சகோதரிகளும் இருந்தனர். (லிற்றுவேனியாவில் தற்பொழுது 11 ஆயர்கள், 636 மறைமாவட்டக் குருக்கள், 84 துறவறக்குருக்கள், 883 பெண் துறவிகள், 867 குருமட மாணவர்கள் இருக்கின்றனர்.) எனினும் இந்நிலை நீடிக்கவில்லை. 1940 இல் சோவியத்தின் ஆக்கிரமிப்பிக்குப்பின் அரசும் மதமும் பிரிக்கப்பட்டன.

1985இல் கோபெச்சோவின் ஆட்சி அமர்வு மாற்றங்களுக்கு வித்திட்டது. 1988 இல் இடம்பெற்ற கம்யூனிசக் கட்சியின் 19 வது சிறப்பு அவைக்குப் பின் மாற்றங்கள் நிகழத் தொடங்கின. மாஸ்கோவில் நடந்த ஆட்சிக்கவிட்பைத் தொடர்ந்து பால்ரிக் நாடுகள் முழுச்சுதந்திரத்தை அனுபவிக்கத் தொடங்கின. மத சுதந்திரமும் வழங்கப்பட்டது. கம்யூனிச அடக்குமுறையிலும் தங்கள் விசுவாசத்தைக் காத்து வந்த இப் பால்ரிக் மக்கள் முதல் முறையாக தம் பூமிக்கு வந்த திருத்தந்தைக்கு இனிய வரவேற்பு அளித்தனர்.

லிற்றுவேனியாவில் இம்மாதம் 4 முதல் 7 வரை பயணத்தை நடத்திய பாப்பிறை 8 ஆம் திகதி அங்கிருந்து புறப்பட்டு லாற்றுவியா சென்றார்.

லாற்றுவியா நாட்டுக் கத்தோலிக்க வரலாறு 12 ஆம் நூற்றாண்டில் தொடங்கியது. 1215ஆம் ஆண்டு நடைபெற்ற நான்காவது லாத்திரன் பொதுச்சங்கத்தின்போது திருத்தந்தை மூன்றாம் இன்னசென்ற் லாற்றுவியாவை மரியின் பூமியாக அறிக்கையிட்டார்.

இரண்டாவது உலகப்போரில் சோவியத்தின் ஆளுகைக்குக் கொண்டுவரப்பட்டது. மெதுவாக வளர்ந்து வந்த கத்தோலிக்கத் திருச்சபையும் தன் உரிமைகளை இழந்தது. தற்சமயம் விடுதலையையடைந்து சுதந்திரமாக வாழும் லாற்றுவியாவில் மதசுதந்திரமும்வழங்கப்பட்டுள்ளது. இந்நாட்டில் கத்தோலிக்கரின் இருப்பு பெருமளவாக இல்லாத போதிலும்

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

# வரலாறு படைக்கும்....

( 1ஆம் பக்கத் தொடர்ச்சி )

50 வருடங்களாக சோவியத்தின் கம்யூனிய அரசின் அடக்குமுறையில் அல்லல்பட்டுக் கொண்டிருந்த இக் குடியரசுகள் அண்மை வருடங்களாக சுதந்திரக் காற்றைச் சுவாசித்து மற்ற நாடுகளுக்கு இணையாக தலை நிமிர்ந்து நிற்க எல்லா நிலைகளிலும் முயற்சித்து வருகின்றனர்.

பால்ரிக் வளைகுடாப் பகுதியில் உள்ள இம் மூன்று குடியரசுகளில் ஒன்றான லிற்றுவேனியா மேற்கில் போலந்தையும், கிழக்கில் லாற்றுவியாவையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. அடுத்துள்ள லிற்றுவேனியாவும், லாற்றுவியாவும் ஏறத்தாள சம பரப்பையே கொண்டுள்ளன. அதாவது 65 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டுள்ளன. மூன்றாவது குடியரசான எஸ்தோனியா இக்குடியரசின் அளவில் மூன்றில் ஒரு பாகம்தான். ஆயினும் தனது பணத்தை வெளியிட்டது, ஏற்றுமதிகளை இருமடங்காக்கியது, வணிகத் தொடர்பில் ரஷ்ஷியாவைச் சார்ந்திருப்பதைக் குறைத்துக்கொண்டது. அன்னியச் செலவாணியைக் கூட்டியது போன்றவற்றில் முன்னணியில் நிற்கும் முதல் முன்னாள் சோவியத் குடியரசாகும்.

இம் மூன்று குடியரசுகளுமே ஜன நெருக்கமற்ற நாடுகளாகும். லிற்றுவேனியாவில் 37 இலட்சம் பேரும், லாற்றுவியாவில் 26 லட்சம்பேரும், எஸ்தோனியாவில் 15 இலட்சத்து 50 ஆயிரம்பேரும் உள்ளனர். தமிழ் நாட்டின் மக்கள்தொகை 5 கோடியே 56 இலட்சத்திற்கு மேலும் இலங்கையில் மக்கள் தொகை 1கோடியே 80இலட்சமாகவும் இருக்கும்போது இன் நாடுகளின் மக்கள் தொகை பற்றி நாம் ஒருவாறு ஊகிக்கலாம். இருந்தபோதிலும் லிற்றுவேனியாவில் ஏறத்தாழ 73 விழுக்காட்டினர் கத்தோலிக்கரும், லாற்றுவியாவில் 19 விழுக்காட்டினரும் எஸ்தோனியாவில் 5 ஆயிரம் கத்தோலிக்கர் அதாவது புள்ளி மூன்று (0·3) விழுக்காட்டினரும் இருக்கின்றனர்.

இம்மூன்று பால்ரிக் குடியரசுகளையும் நன்கு அறிந்துள்ள போலந்துநாட்டவரான திருத்தந்தையின் திருப்பயணம் இம்மக்களில் விசுவாசப் புத்துணர்ச்சியைக் கொண்டுவரும் என நம்புவோம்.

# காவலன் கண்மணிகள்

| ஒளி: 7<br>கூடர்: 18 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |
|---|---|

## அம்மா

**9 போர்க்காலம் (3) செபமாலை சொல்லுங்கள் :**

13-6-1917 தேவதாய் அச்சிறுவர்களுக்கு அதே இடத்தில் மீண்டும் காட்சியளித்தாள். அவ்வேளை லூசியா பல கேள்விகள் கேட்டாள். அம்மா அவ்வினாக்களுக்கு விடையளிக்கும் போது, ''நீ இன்னும் நீண்ட காலம் இந்த உலகத்தில் வாழ வேண்டும். என்னுடைய தூய இருதய பக்தியைப் பரப்புமாறு யேசு ஆசிக்கிறார்'' என்று கூறினாள்.

மூவருக்கும் இக்காட்சியின் பின் பல பக்கத்தாலும் பல இன்னல்கள் வந்தன. பங்குத்தந்தை அவர்களைத் துருவித் துருவி விசாரித்தார் பிள்ளைகள் உறுதியாகப் பதில்களைச் சொன்னபோதும் அவர் திருப்தியடையவில்லை. இதனால் லூசியா மனம் சோர்ந்தாள். 13-07-1917 லூசியாவின் உள்ளத்தில் அவளையறியாது புத்துணர்வு பிறந்தது. அவள் ஜெசிந்தாவையும், பிரான்சிஸ்கோவையும் அழைத்துக்கொண்டு ஆண்டவனின் (எங்கள்) அம்மாவைக் காணவிரைந்தாள்.

லூசியாவின் பெற்றோரும் அவர்களுடன் சென்றனர். அங்கே! நான்காயிரம் மக்கள் கூடியிருந்தனர். நண்பகல்! ஒரு பேரொளி மின்னல் பளிச்சிட்டது. அருள் நிறை அம்மா மூன்றாம் முறை காட்சிதந்தாள். அவ்வேளை, ''அம்மா, என்னிடமிருந்து எதை விரும்புகிறீர்கள்?'' என்று லூசியா கேட்டாள்.

''உலகப் போர் முடிவுக்கு வரவேண்டுமானால் நாள்தோறும் செபமாலை சொல்லுங்கள்'' என்று அன்னை பகர்ந்தாள். பாவிகள் மனந்திரும்ப தியாகங்கள் புரியச் சொன்னாள். தமது கைகளை நீட்டி, பேரொளியால் நிலத்தைப் பிளந்து நரகக்காட்சியைக் காட்டினாள். நரகத்தில் விழும்பாவிகளைக் காக்க மரியாயின் மாசற்ற இருதய பக்தியைப்பரப்ப யேசு ஆசிப்பதாகக் கூறினாள். மேலும் அன்னை ''செபமாலையைச் சொல்லும்போது, ஒவ்வொரு பத்து மணிகளின் முடிவிலும், ''ஓ என் யேசுவே! எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும், எங்களை நரக நெருப்பிலிருந்து இரட்சித்தருளும். சகல ஆத்துமாக்களையும் பரலோக பாதையில் வழி நடத்தியருளும். உமது இரக்கம் அதிகமாக வேண்டியவர்களுக்கு விசேச உதவி செய்தருளும்'', என்று செபிக்கச் சொன்னாள்.

அன்புக்கண்மணிகளே!

அம்மா சொன்னதுபோல் செபமாலை சொல்லுங்கள். சிறு, சிறு ஒறுத்தல் முயற்சிகள் செய்யுங்கள். ''எங்கள் நாட்டில் அரசு நடத்தும் அர்த்தமற்ற போர் அம்மாவின் அருளால் நிட்சயம் நிறுத்தப்படும்,'' என்ற உறுதிப்பாட்டுடன் கடமையைச் செய்யுங்கள்.

அன்புக் கண்மணிகாள்!

ஒக்டோபர் மாதத்தில் போட்டி ஆரம்பமாகும். பாதுகாவலனைப் பத்திரப்படுத்தினால் பரிசுபெற வாய்ப்புண்டு.

உங்கள் அன்பின், அன்புவிழி


## 5 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

திருமதி. மரியபாக்கியம் செபஸ்தியாம்பிள்ளை
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)



மலர்வு: 23-06-1923 உதிர்வு: 18 09-1988

ஐந்தாண்டும் ஓடியதே
அம்மா! நின்பிரிவால்
நீராடும் கண்களில்
நிழலாடுதே உன் உருவம்
போராடும் நெஞ்சத்தில்
அணையாத தீபமே!
எம் மரிய பாக்கியமே
இறைவனடிஇணைந்திடவே
இறைஞ்சுகிறோம்
நிதம் நிதமே.

இவரின் ஆன்ம சாந்திக்காக (18-09-93) சனிக்கிழமை காலை 6. 15 மணிக்கு புனித மரியாள் பேராலயத்தில் இரங்கற்பலி ஒப்புக்கொடுக்கப்படும், என்பதை அன்பு நெஞ்சங்களுக்கு அறியத்தந்து இவரின் ஆன்ம சாந்திக்காக ஒப்புக்கொடுக்குமாறு தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# எதிர்காலத்தில் பொறுப்புள்ள குடிமக்களாக வாக்களிக்க வேண்டும்

ஸ்பெயினில் இடம் பெற்ற தேர்தலையொட்டி மேய்ப்புப் பணிச் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர் அந்நாட்டு ஆயர்கள். வாழ்வு மற்றும் சமூகத்தின் மத்தியில் கிறிஸ்தவக் கண்ணோட்டம் கொண்டவர்களாக எதிர்காலத்தில் பொறுப்புள்ள குடிமக்களாய் வாக்களிக்க வேண்டுமென மக்களைக் கேட்டுக் கொண்டனர் ஆயர்கள்.

கிறிஸ்தவர்கள் தங்களுக்கு இருக்கும் வாக்குரிமையை முழுமையாகப் பயன்படுத்த வேண்டுமெனக் கேட்டுள்ள ஆயர்கள் வேலையில்லாத்திண்டாட்டம், போதைப்பொருள், ஏழைகள், ஓரங்கட்டப் பட்டோர் ஆகிய பிரச்சனைகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளனர். இளைஞர் கல்வியில் குறைபாடுகளைக் களையவும் வாழ்வில் ஒழுக்க ரீதிக் கண்ணோட்டங்களையும் சமய எண்ணங்களையும் பின்னுக்குத் தள்ளும் சமூகத் தொடர்பு சாதனங்களை நன்முறையில் செயற்படவும் அழைப்பு விடுத்தார்கள் ஆயர்கள்.

# ஐ. நா. அமைதி காக்கும் பணி நீடிப்பு

கம்போடியாவில் ஐ. நாவின் அமைதிகாக்கும் துருப்புக்களின் பணி வரும் நவம்பர் மாதம் 11ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

கம்போடியாவில் பணியாற்றும் அமைதிகாக்கும் துருப்புக்கள் ஆகஸ்ட் மாதத்திலிருந்தே வெளியேறத் தொடங்கியுள்ள போதிலும் அந்நாட்டின் அண்மை அரசியல் நிலமைகளால் முழு வெளியேற்றமும் சிறிது காலத்துக்குத் தள்ளிப்போடப்பட்டுள்ளது.

கம்போடியாவில் தேர்தலைக் கண்காணிக்கவும், 3 இலட்சத்திற்கு மேற்பட்ட அகதிகளை நாட்டிற்குக் குடி அமர்த்தவும் என அங்கு அனுப்பப்பட்ட ஐ.நா. அமைதி காக்கும் துருப்புக்கள் கடந்த வருடம்வரை 22 ஆயிரம் பேர் வரை இருந்தனர் கடந்த மே மாதம் நடந்த தேர்தலில் வெற்றி அடைந்தகட்சி வரும் மாதம் கம்போடியாவில் பதவியேற்கவுள்ளது.

# மதம் மீதான அரசியல் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன

ரஷ்ஷிய அரசுத் தலைவர் போர்றிஸ் யெஸ்ரின் மதத் தலைவர்களின் தலையீட்டின் பேரில் ரஷ்யாவில் வெளிநாட்டு மறைபோதகர்கள்மீதும், வெளிநாட்டை மையமாகக்கொண்ட மத நிறுவனங்கள் மீதும் கொண்டுவரப்பட்ட கட்டுப்பாடுகளை ரஷ்ஷிய சட்டமைப்பாளர்கள் தளர்த்தியுள்ளனர் என்று சீனச் செய்தி நிறுவனம் கூறுகின்றது.

கடந்த வாரத்தில் அங்கீகரிக்கப்பட்ட புதிய மசோதாவின்படி வெளிநாட்டை மையமாகக் கொண்ட திருச்சபைகள் ரஷ்ஷியத் திருச்சபையுடன் சேர வேண்டும் அல்லது அரசியல் ஒப்புதல் பெறவேண்டும் என்ற கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன.

கடந்த ஜுலையில் கொண்டுவரப்பட்ட மசோதா வெளிநாட்டுக் கத்தோலிக்கக் குழுக்களும், துறவிகளும் ரஷ்ஷியாவில் நுழைவதைக் கட்டுப்படுத்துவதோடு, திருச்சபை நடவடிக்கைகள் மீது அரசுக்கு அதிகமான அதிகாரத்தைக் கொடுக்கும் என்று கூறி அதற்கு ரஷ்ஷிய அப்போஸ்தலிக்க நிர்வாகி அமெரிக்க ஐக்கிய நாட்டு ஆயர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

Chundikuli Branch Library

# மறை சாட்சிகளின் குன்று

திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் லிற்றுவேனியாவில் சிலுவைகளின் குன்றின் அடிவாரத்தில் 07–09–1993 செவ்வாய் அன்று திருப்பலி ஒப்புக்கொடுத்தார்.

சிலுவைகளின் குன்று என்ற பெயர் எவ்வாறு ஏற்பட்டதென்று அறிவது சிறப்பு.

இக் குன்றானது லிற்றுவேனிய மக்களின் உணர்வுகளோடும், மத உணர்வுகளோடும் நெருங்கிய உறவு உடையது.

15ஆம் நூற்றாண்டில் இருந்து கத்தோலிக்க மக்கள் முக்கிய நிகழ்ச்சிகளைக் குறிக்க இக்குன்றில் சிலுவைகளை நாட்டி வந்தனர். இது ஒரு பாரம்பரியமாகவே இருந்து வந்தது. 1831க்கும் 1861க்கும் இடைப்பட்ட காலத்தில் ரஷ்ஷிய ஆட்சிக்கெதிராக எழுந்த பொழுது அதிக சிலுவைகள் நாட்டப்பட்டன.

1940 வது வருடம் சோவியத் யூனியன் துருப்புக்கள் பால்ரிக் நாடுகளை ஆக்கிரமித்த போது 400 பெரிய சிலுவைகளும் ஆயிரக் கணக்கான சிறிய சிலுவைகளும் நாட்டப்பட்டன. சோவியத் ஆக்கிரமிப்பின் போது, குறிப்பாக 1961 - 75 க்கும் இடைப்பட்ட காலத்தில் கம்யூனிஷ்ட் அதிகாரிகள் இச்சிலுவைகள் நினைவுச் சின்னத்தை ஒழிக்க முயன்றார்கள். ஒரே நாளில் 5000 சிலுவைகள் பிடிங்கி எறியப்பட்டன. ஆனால் மக்களோ இதிலும் அதிக எண்ணிக்கையில் சிலுவைகளை நாட்டினர்.

1990 ஆம் வருடம் எடுத்த கணக்கெடுப்பின்படி இக் குன்றில் பெரிய சிலுவைகளோ ஐம்பத்து ஐயாயிரத்து முன்னூற்றி முப்பத்தொன்றாக (55,331) இருந்தன. ஆனால் 1990 — 91 இன் சுதந்திரப் போராட்டத்தின் போது மேலும் பெரும் எண்ணிக்கையில் சிலுவைகள் சேர்க்கப்பட்டன. இது மறை சாட்சிகளின் குன்றாய் எழுந்து நிற்கின்றது.

## சிங்கப்பூரில்:

# புகைக்கும் இளைஞர்களுக்கு அபராதம்

புகைப் பிடித்தலைக் கட்டுப்படுத்தும் சிங்கப்பூர் அரசின் ஒரு பகுதியாக பொது இடங்களில் சிகரெட் புகைக்கும் அல்லது வைத்திருக்கும் 18வயதிற்குட்பட்ட இளைஞர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுவருவதாக ஏஜன்சி நிறுவனம் கூறுகின்றது.

முதல் தடவை மீறுபவர்களுக்கு 50 சிங்கப்பூர் டொலர்களும் 2 தடவைகளுக்கு 100 டொலரும் அபராதமாக விதிக்கப்படுகின்றன. சிறுவர்களுக்குப் புகையிலை விற்பவர்களுக்கு 10 ஆயிரம் சிங்கப்பூர் டொலரும் அபராதமாக விதிக்கப்படுகின்றது. ஊதிய உயர்வு, ஜனத் தொகைப் பெருக்கம், புகைப்பிடித்தால் வரும் தீமைமைகளை அறியா திருத்தல் போன்றவை ஆசிய பசுபிக்பகுதிகளில் புகைப்போரின் எண்ணிக்கை அதிகரிக்கக் காரணமாக இருக்கின்றது என உலக நல வாழ்வு நிறுவனம் கூறியுள்ளது.

# லூத்தரன் சபையினருடன் பேச்சுவார்த்தை

கிறிஸ்தவ ஐக்கியத் தொடர்புடைய மிகச் சிரமமான இறையியல் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண கத்தோலிக்க, லூத்தரன் சபைகளுக்கிடையிலான பேச்சு வார்த்தைகள் தயாராக இருப்பதாக கருதினால் எட்வேட் கதிரி கூறினார்.

கடந்த 25 வருடங்களாகக் கத்தோலிக்கர்களுக்கும் லூர்தரன் கிறிஸ்தவ சபையினருக்குமிடையிலான பேச்சு வார்த்தைகள் இரு சபையினருக்குமிடையிலான நெருங்கிய உறவுக்கு இட்டுச் செல்கின்றன என்றார்.

கிறிஸ்துவின் செய்தியை எடுத்துச் செல்லவேண்டிய தூதுவர்களான கிறிஸ்தவர்கள் முதலில் தங்களுக்குள்ளேயே ஒருமைப்பாட்டை உடையவர்களாக இருக்க வேண்டுமென மேலும் உரைத்தார்கருதினால் கதிரி.

# பால்ரிக் குடியர...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களின் விசுவாசம் சாரமுள்ளதாக இருக்கின்றது. மாதாமேல் மிகுந்த பக்தி கொண்ட லாற்றுவியர்களின் விசுவாச வாழ்வு திருத்தந்தையின் திருப்பயணத்தால் மேலும் உறுதி பெறட்டும்.

இம்மாதம் 10ஆம் திகதி காலை திருத்தந்தை செல்லும் நாடு எஸ்தோனியா. இங்குள்ள ஏறத்தாள 5 000 கத்தோலிக்கரோடு ஒரு நாளைய பயணத்தையே நடத்தவுள்ளார் திருத்தந்தை.

இயற்கையை வழிபடும் காலம், 1227 ஆம் ஆண்டு முதல் 1944 வரையிலான கிறிஸ்தவக் காலம், சோவியத் மாக்சியக் காலம் என இந்நாட்டு வரலாற்றை மூன்று பாகங்களாகப் பிரிக்கலாம். 1918 ஆண்டு ஆம் முதல் 1940 வரை முழு மத சுதந்திரத்தை அனுபவித்துவந்த இந்நாட்டில் 1944 முதல் மத நம்பிக்கையற்ற கொள்கை சோவியத் யூனியனால் கட்டாயமாகப் புருத்தப்பட்டதைத் தொடர்ந்து மதமும் மறைந்தது.

எனினும் மற்ற இரு குடியரசுகளுடன் 1991 ஆம் ஆண்டு எஸ்தோனியாவும் சுதந்திரமடைந்ததைத் தொடர்ந்து மத சுதந்திரமும் வழங்கப்பட்டது. தற்சமயம் இது நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. இந் நாட்டுக்கான திருத்தந்தையின் திருப்பயணம் நல்வழி காட்டும் என விழைவோம்.

# இந்தியாவில் உலக மத கூட்டம்

உலக மதங்களின் கூட்டம் வரும் ஆண்டு இந்தியாவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது – வரும் பெப்ருவரி மாதம் 3 முதல் 6 வரை புதுடெல்லியில் இடம் பெற உள்ள கூட்டத்தில் உலகின் அனைத்து மதங்களிலுமிருந்து ஒரு லட்சம் பிரதிநிதிகள் மட்டில் கலந்து கொள்வார்கள் என்று அறிவித்தார் சீக்கிய மதத்தலைவர் றயிந்த சிங். உலக அமைதிக்கு மதங்கள் பங்கை அளிப்பதாக இக் கூட்டம் நடக்கும் என்றார் அவர்.

சிக்காகோவில் நடந்து வந்த 8 நாள் கருத்தரங்கு இச் சனியன்று முடிவிற்கு வந்தது.

## குருத்துவ நினைவு தினம்

### ''செபிப்போமாக''

ஒக்ரோபர்

| | | |
|---|---|---|
| 1 | ஸ்ரனிஸ்லஸ் பொஸ்கோ C. R. | 1983 |
| | கொட்வின் கியோமர் C. R. | 1983 |
| 3 | றெஜி ராஜேஸ்வரன் | 1965 |
| 5 | ஜெறோம் லம்பேட் o.m.i. | 1981 |
| | பிரான்சிஸ் டானியல் o.m.i. | 1968 |
| 15 | A. P. தேவசகாயம் | 1968 |
| 19 | T. E. தேவறாஜன் | 1972 |
| | J. நிக்கலஸ் | 1972 |
| | S. எட்வின் | 1972 |
| | A. I. பேர்ணாட் | 1970 |
| 26 | B. F. பொணிபஸ் | 1977 |

# மதமின்றி நாடு சிறப்பாக அமையாது

★ கம்யூனிஸ்ட் அரசுத் தலைவர்

# மதசுதந்திரம் உரிமைகளுக்கு அடிப்படை

★ திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர்

லிற்றுவேனியா தலைநகரத்தின் விமானத்தளத்தில் திருத்தந்தை இறங்கியபோது 60 வயது முன்னாள் கம்யூனிசவாதியான அரசுத்தலைவரின் உரையும், நடவடிக்கைகளும் யாரும் எதிர்பாரதனவாகவே இருந்தன.

மதமின்றி இந்நாட்டின் வருங்காலம் சிறப்பாக அமையாது என்று அரசுத் தலைவர் அடித்துக் கூறியபோது கைதட்டல்கள் மேகங்களைக் கலைத்தன. லிற்றுவேனியா ஒரு கத்தோலிக்க நாடு எனவும் எடுத்துரைத்தார் முன்னாள் கம்யூனிச நாடான லிற்றுவேனியாவின் அரசுத் தலைவர்

திருத்தந்தையின் கைகளைப் பிடித்து மோதிரத்தை முத்தி செய்தது மட்டுமல்ல, திருத்தந்தை மக்களுக்கு ஆசீர் வழங்கியபோது பிதா, சுதன் குறியீட்டையும் போட்டுகொண்டார் அரசுத் தலைவர்.

திருத்தந்தை தனது முதல் உரையை லிற்றுவேனிய மொழியில் ஆற்றத் தொடங்கிய பொழுது மக்களின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

''யேசுக்கிறிஸ்து இன்றும் என்றும்'' என்று தன்உரையை ஆரம்பித்தார். ''உள்ளத்தின் ஆழத்திலிருந்தும் உணர்ச்சிவசப்பட்டும் லிற்றுவேனிய மண்ணை முத்தமிட்டுள்ளேன். எனது சிறப்பு அன்புக் குரிய இப்பூமிக்கு பயணம் மேற்கொள்ள வேண்டுமென்று எவ்வளவோ ஏங்கினேன்.

இப்பூமி உலகளாவிய கிறிஸ்தவ சமூகத்திற்கு மிகவும் நெருக்கமானது. மத சுதந்தரத்திற்கான தாக்கத்திற்கு லிற்றுவேனியா அமைதியான சாட்சியாக இருந்து வந்துள்ளது. ஏனெனில் மத சுதந்தரம் தான் ஒவ்வொரு மனித, மற்றும் குடியுரிமைகளுக்கு அடிப்படையானது.

ஒரு திருத்தந்தை தம் காலடிகளை முதன் முறையாக பதித்து வைத்துள்ள இன்றைய நாள் ஒரு வரலாற்று நிகழ்வைக் குறிக்கின்றது.

இம்மண்ணிற்கு கிறிஸ்தவ நற்செய்தியையும், சுதந்தரத்தையும் கொண்டு வர முயற்சித்தவர்களை இந் நேரத்தில் நினைக்காமல் இருக்க முடியாது என்று பாப்பிறை கூறினார்.

---

பால்ரிக் குடியரசுகளின் திருத்தந்தையின் 61 வது வெளிநாட்டுத் திருப்பயண நிகழ்வுத் தொகுப்பு அடுத்த இதழில் வெளிவரும்.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1993 ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 10ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது இல. B/Q. 1001/58/81